# பிரிட்டனில் நாணயமதிப்பு குறைக்கப்பட்டது

Registered as a Newspaper in Ceylon * விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389

National Tamil Daily

மலர் 9
இதழ் 351
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க கார்த்திகை 4 ஷஃபான் 17 திங்கட்கிழமை [20-11-67]

## இங்குள்ள நிலைமையில் மாற்றம் ஏற்படுமா?

### மந்திரிசபை ஆராய்கிறது

கொழும்பு, ஞாயிறு பிரிட்டன் தனது நாணய மதிப்பை 14.3 வீதமாக நேற்றுகுறைத்திருப்பதைன தொடர்ந்து இங்கு எத்ன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்பது குறித்து இலங்கை மந்திரிசபை இன்று அவசரமாகக் கூடி ஆராயவிருக்கிறது.

பிரிட்டன் நாணய மதிப்பீட்டுக் குறைப்பைத்தொடர்ந்து இன்று இலங்கையிலுள்ள வங்கிகளுக்கு இரண்டுநாள் விடுமுறை விடப்பட்டது.

இலங்கையின் நாணய மதிப்பீட்டை குறைப்பதா என்பது பற்றி இலங்கை மத்திரிசபை ஆராய்ந்து வருவதாகத் தெரிகிறது.

# பொலிஸ்இன்ஸ்பெக்டருக்கு ரிமாண்ட்

## வல்வை இளைஞன் கொலையின் எதிரொலி

வல்வெட்டித்துறை, ஞாயிறு வல்வெட்டித்துறையில் பொலிஸ் இன்ஸ்பெக்டராகக் கடமையாற்றி இப்போது பம்பலப்பிட்டிக்கு பொலிஸ் டிப்போவில் கடமையாற்றும் இன்ஸ்பெக்டர் எஸ். சி. பத்திராஜவை இம்மாதம் 26-ம் திகதிவரை ரிமாண்டில் வைக்குமாறு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா இன்று உத்தரவிட்டார்.

வல்வெட்டித்துறையில் சென்ற ஏப்ரல் மாதம் 8-ந் திகதி நடந்த துப்பாக்கிப் பிரயோகச் சம்பவத்தில் மாண்ட ஆர். சிவஞானசுந்தரத்தின் மரணம் ஒரு கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டதைத் தொடர்ந்து இன்ஸ்பெக்டர் எஸ். ஸி. பத்திராஜ மீதும் மற்றும் மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்மீதும் மாண்ட இளைஞரின் தந்தையான வைத்திலிங்கம் இராமசாமிப் பிள்ளை தனிப்பட்ட முறையில் வழக்கொன்றைத் தாக்கல் செய்திருக்கிறார். இன்ஸ்பெக்டரும் மற்றும் மூவரும் சிவஞானசுந்தரத்தைக் கொலை செய்ததாகவும் கொலை செய்ய உடந்தையாக இருந்ததாகவும் இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இன்று காலை இவ்வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

### நிராகரித்தார்!

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஜோர்ஜ் கந்தப்பா எதிரி சார்பில் ஆஜராகி எதிரியை பிணையில் விட வேண்டும் என்று கோரினர். இதை மாஜிஸ்திரேட் நிராகரித்தார். அதற்குரிய காரணங்களை இம்மாதம் 26-ந் திகதி மாஜிஸ்திரேட் தெரிவிப்பார்

எதிரிதரப்பில் ஆஜரான வழக்கறிஞரின் இவ்வழக்கை வேறு ஒரு நீதிபதியின் முன்னிலையில் விசாரணைசெய்யப் படவேண்டுமென்ற விண்ணப்பத்தையும் மாஜிஸ்திரேட் நிராகரித்தார். மேலும் இவ்வழக்கை இந்த நீதிமன்றமே விசாரிக்குமென்றும் மாஜிஸ்திரேட் தெரிவித்தார்.

வழக்காளி வி வி இராமசாமிப்பிள்ளை தரப்பில்வழக்கறிஞர் என். சிவஞானசுந்தரம், எம். சிவசிதம்பரம், பி பாலவடிவேல், கே மோதிலால் நேரு ஆகியோர் புரக்டர்கள் கே இரத்தினசிங்கம் என் நடராசா, எஸ் சண்முகசுந்தரம்ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார்கள்

எதிர்தரப்பில் வழக்கறிஞர் ஜோர்ஜ் கந்தப்பா வி ரி எஸ் பெர்னாண்டோ திரு அகமட் அனுசரணையுடன் ஆஜரானர்

# யாழ்ப்பாணத்தில் அரிசிவிலைதிடீர்ஏற்றம்

யாழ்ப்பாணம், திங், யாழ்ப்பாணத்தில் அரிசியின்விலை திடீரென உயர்ந்துள்ளது. வடமாகாணத்துக்கு மற்றைய மாகாணங்களிலிருந்து அரிசி கொண்டு வருவதற்கு தடை செய்யப்பட்டதைத் தொடர்ந்தே இந்த விலைஏற்றம் எனத் தெரிகிறது.

அறுபது ரூபாவாக விற்ற ஒருமூடை அரிசி இப்போது 93 ரூபாயாக விற்கப்படுகிறதாம்.

ஒருரூபாயாக விற்ற ஒரு சாப்பாட்டின் விலை இப்போது ரூபா 1-25 சதமாக உயர்ந்துள்ளதாம்.

## 'நெஸ்பிரே' மோதல்

யாழ்ப்பாணம். திங். 'நெஸ்பிரே' மோதலில் ஒருவர் வர்த்தக ஸ்தாபனமொன்றுக்குள் வைத்துத் தாக்கப்பட்டாராம்.

நேற்று யாழ்ப்பாணம் பெரியகடையிலுள்ள வர்த்தக ஸ்தாபனமொன்றில் 'நெஸ்பிரே' வழங்கப்பட்டது. காலையிலிருந்து நண்பகல்வரை நெஸ்பிரே வாங்குவதற்காகக் 'கியூ' நின்றவர்கள் பெரும்பகுதியினர் ஏமாற்றத்துடன் திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டதாம். 'கியூ'வில் நின்ற ஒருவர் செய்த 'விமர்சனம்' ஒன்றைத் தொடர்ந்தே மேற்சொன்னவர் தாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

'கியூ'வில் நின்றவர்கள் காத்துக்கொண்டிருக்க, 'செல்வா'க்குள்ள பலருக்கும் நெஸ்பிரே வழங்கப்பட்டதாக புகார்கள் தெரிவிக்கின்றன.

## அங்கத்தவருக்கு கடனுதவி

கொழும்பு, ஞாயிறு. கூட்டுறவு சங்க அங்கத்தவர்களுக்கு புதிய விவசாயத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கடனுதவி, எதற்காக வழங்கப்படுகின்றதோ, அதற்காகவே பாவிக்கப்பட வேண்டுமென்றும், குறித்த தவணையில் கடனை செலுத்தி விடவேண்டுமென்றும் கூட்டுறவு சம்மேளனம் கருதுவதால் அதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

1. யானை மார்க் நம்பர் 1 சிமென்ஸ
ஒடிகொலோன் சிசு பரிபாலிப்புக்கும், நோயாளிகள் அறைக்கும், குளிக்கும் அறைக்கும்.
மறவாதீர்—சிமென்ஸ்.

2. சிமென்ஸ்— வாசனை செவ்விளநீர் தேங்காயெண்ணையும் ஆமணக்கெண்ணை கூந்தல் வளரும் தைலமும் உங்கள் உரோமத்தை செழிப்பாகவும் சிறப்பாகவும் வளர்க்கும்.

3. சிமென்ஸ் புத்தராஜா தைலம்
தலையிடியை ஒரு நிமிடத்தில் நிறுத்திவிடும். எல்லாவிதமான தலையிடிகளுக்கும் பீநசம் சம்பந்தமான சகல நோய்களுக்கும் சிறந்த ஒளஷதம்.

இலங்கையிலுள்ள சகல பிரசித்திபெற்ற வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

**சிமென்ஸ் பற்பொடி:** தினமும் சிமென்ஸ் பற்பொடியால் உங்கள் பற்களை துலக்குங்கள். பல் சூத்தை முதலிய எல்லா பல், வாய் நோய்களையும் குணப்படுத்தும் ஓர் ஆயுர்வேத தயாரிப்பு. நல்ல பற்களில் சூத்தை தொற்றுதபடி அவற்றை பாதுகாத்து இறுகப்பண்ணும். பற்களை வெண்மையாக்கும். நச்சுக் கலப்பில்லாதது.

ஒரு பாக்கெட் 60 சதம்,

வந்தபின் காப்பதிலும் வருமுன் காத்தல் நன்று
இதுதான் நிவாரணம்:
**சிமென்ஸ் கடுக்காய் குளிகைகள்**

இவற்றில் ஒரு பாக்கெட்டை வைத்துக்கொண்டு வயிற்றுக்குழப்பம், தலைவலி வரும்போது உபயோகிக்கவும். ஒரு பாக்கட் ரூ. 1/20, தபால் செலவு 60 சதம்.

**சிமென்ஸ் ஒடிகொலோன்**
1 அவுன்ஸ் போத்தல் ரூ. 1-25
2 அவுன்ஸ் போத்தல் ரூ. 2-25

**சிமென்ஸ் ஆமணக்கெண்ணை கூந்தல் தைலம்**
4 அவுன்ஸ் போத்தல் ரூ. 2-00
8 அவுன்ஸ் போத்தல் ரூ. 3-50

**சிமென்ஸ் செவ்விளநீர் தேங்காயெண்ணை கூந்தல் தைலம்**
4 அவுன்ஸ் போத்தல் ரூ. 1-10
8 அவுன்ஸ் போத்தல் ரூ. 2-00

**சிமென்ஸ் பற்பொடி**
1 பாக்கெட் -/60 சதம்

**சிமென்ஸ கடுக்காய் குளிகைகள்**
100 குளிகை போத்தல் ரூ. 3-50
250 குளிகை போத்தல் ரூ. 8-50
500 குளிகை போத்தல் ரூ. 15-00

**சிமென்ஸ புத்தராஜ தைலம்**
1 அவுன்ஸ் போத்தல் ரூ. 1-35
6 அவுன்ஸ் போத்தல் ரூ. 3-25

வியாபாரிகளுக்கு விசேஷ சலுகைகள்

**சிமென் பிரதர்ஸ்,**
234, 5-ம் குறுக்குத்தெரு,
புறக்கோட்டை, கொழும்பு—11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டாக்ஸிகாரரின்புதியதந்திரம்

## பொலிஸ் அதிபர் நடவடிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்

குறுகிய இடங்களுக்கு டாக்ஸிகளை வாடகைக்கு விடாமல்செய்யப் புதிய சில வழிகளை யாழ்ப்பாண டாக்ஸிச் சாரதிகள் தற்போது கையாண்டு வருகின்றனராம். இதுசம்பந்தமான பல புகார்கள் பொலிஸாருக்குக் கிடைத்துள்ளன.

இரவு நேரங்களில் படமாளிகை, புகையிரத நிலையம் ஆகிய முக்கிய இடங்களில் தங்கள் டாக்ஸிகளை நிறுத்திவைத்திருக்கும் டாக்ஸிச் சாரதிகள் குறுகிய இடங்களுக்கு டாக்ஸியை வாடகைக்கு விடுமாறு பொதுமக்கள் கேட்கும்போது அவர்களை டாக்ஸியில் ஏற்றி, என்ஜினை இயக்குவதுபோல நடித்து டாக்ஸி பழுதடைந்துவிட்டதெனப் பொய் கூறி அவர்களை இறக்கிவிட்டுத் தூர இடங்களுக்குச் செல்பவர்களை மாத்திரம் ஏற்றிக்கொண்டு செல்கிறார்களாம்.

டாக்ஸிச் சாரதிகளின் இந்தக் களவு முறைகளைக் கண்டுபிடிக்க, சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர் தலைமையிலான இரகசியப் பொலிஸ் பிரிவொன்றை யாழ்ப்பாணத்தில் அமைக்கப் பொலிஸ் பகுதியினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிகின்றது. இதற்காக டாக்ஸிச் சாரதிகள் பற்றிய பகிரங்க விசாரணையொன்றை வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் இம்மாத இறுதியில் இங்கு நடத்த இருக்கிறார்.

இதற்கு முன்னேடியாக இங்கு வாடகைக்கு விடப்படும் டாக்ஸிகளின் இலக்கங்கள், டாக்ஸிகள் தொகை, உரிமையாளரின் பெயர், விலாசம், சாரதியின் பெயர், விலாசம் போன்ற பூரண விலாசங்களும் தற்போது பொலிஸாரால் சேகரிக்கப்பட்டு வருகின்றன. [ந. நி.)

## விபத்தை தடுக்க சாரணர் உதவுவர்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாண நகரப் பகுதியில் வீதிஒழுங்குகளை நிலைநாட்டி விபத்துக்களைத் தடுக்க பொலிஸாருடன், பாடசாலைகளின் சாரண இளைஞர்களும் இனி ஒத்துழைப்பார்கள்.

மாநகரசபை ஆணையாளர்களின் அங்கிகாரத்துடன் இம்முறை அடுத்த மாதம் 1ம் திகதியிலிருந்து இங்கு ஆரம்பிக்கப்படும். இதற்கு முன்னர் மாநகரசபையின் ஒவ்வொரு சந்திகளிலும் வீதிகளைக் கடக்க வேண்டிய இடங்கள், பாதசாரிகள் செல்ல வேண்டிய பக்கம் போன்றவிபரங்களை அங்கு அமைப்பார்கள், [ந.நி

## 2,500 ரூபா திரட்டப்பட்டது

உடுப்பிட்டி, ஞாயிறு

அகில இலங்கை சுயரோக நிவாரண சங்கத்தின் வடமராட்சிக்கிளை கடந்த மாதம் நடத்திய கொடித்தினத்தில் 2,500 ரூபா திரட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "பாடசாலையை முன்னேற்றியவர்"

யாழ்ப்பாணம், ஞாயிறு

"ஏறக்குறைய5ஆண்டுகள் இவ்வித்தியாலய ஆசிரியராகவும் பதில் அதிபராகவும் கடமையாற்றிய காலத்தில் மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் ஒருமுகப்பட்ட பாராட்டைப் பெற்றுப் பாடசாலையை முன்னேற்றத்திற்குக் கொண்டுவந்தவர் திருவாளர் நடராசாவாகும்."

மேற்கண்டவாறு காலஞ்சென்ற ஆசிரியர் நடராசகுருவின் பிரிவையிட்டு அடம்பன் மகாவித்தியாலயத்தில் நடந்த அனுதாபக் கூட்டத்தில் அவ்வித்தியாலய ஆசிரியர் திரு. அ. ஆறுமுகம் குறிப்பிட்டார். கூட்டத்திற்கு செல்வி முருகுப்பிள்ளை தலைமைதாங்கினார். அவர் தொடர்ந்து குறிப்பிட்டதாவது:- திரு. நடராசகுரு மறைவு பொதுவாக மாணவர்களுக்கும் தமிழ்ச்சமூகத்துக்கும் பேரிழப்பாகும். 57வயது வரை பிரமச்சாரிய ஒழுக்கமுறையோடு வாழ்ந்தவர்.

ஆசிரியர் திரு வி. சோமசுந்தரமும் பேசினர். கூட்ட ஆரம்பத்திலும் முடிவிலும் 2நிமிட அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

## பிரிட்டிஷ் நாடகக் குழு இலங்கை வருகிறது

கொழும்பு, ஞாயிறு

அடுத்த மாதம் இலங்கை வரவிருக்கும் ஓர் ஆங்கில நாடகக் கம்பனி, பிரிட்டிஷ் நாடகத்துறையின் இரு மாறுபட்ட [illegible] அம்சங்களை இலங்கை[illegible] ரசிகர்களுக்கு நன்கு எடுத்துக்காட்டுமெனக் கருதப்படுகிறது. பிரிட்டிஷ் கவுன்சிலின் ஆதரவின் கீழ் இங்கு வரும் புரொஸ்பெக்ட் புறடக்ஷன்ஸ் கம்பனி பேர்னட்ஷோவின் 'மிஸலேயன்ஸ்', 'ஹரட் பின்டர்ஸின் 'த பேர்த்டே பார்டி' ஆகிய நாடகங்களை நடித்துக்காட்டும். கொழும்பு, கண்டி, காலி ஆகிய இடங்களில் இந்த நாடகங்கள் மேடையேற்றப்படும்'

## ஆலய நிர்வாகிகள்

ஊர்காவற்றுறை, ஞாயிறு

காரைநகர் ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி ஆலய புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: திரு. ஐ. தம்பிராசா, காரியதரிசி திரு. செ. முருகநாதபிள்ளை, தனாதிகாரி; திரு. நா. கந்தையா.

## வெங்காய காய்வனவு

### சங்கங்களுக்கு சுற்றுநிருபம்

சங்கானை, ஞாயிறு

"கொள்வனவு செய்யப்பட்ட வெங்காயங்களில் ஏற்படும் காய்வனவு ஈடுசெய்வதில் பல சங்கங்கள் பல முறைகளை கையாண்டு வருவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. காய்வனவை நிவர்த்திசெய்வதில் ஒரு சீரான முறையை ஏற்படுத்துவதற்கு ஓர் அந்தருக்கு 10 ருத்தல் வெங்காயத்தை சங்கங்கள் எடுக்க வேண்டும். ஓர் அந்தருக்கு 4 ருத்தல் தொடக்கம் 5 ருத்தல்வரைமட்டுமே உள்ளபடியான காய்வனவு என்பதை அனுபவவாயிலாகத் தெரிகிறது. ஆகையால் காய்வனவு 10 ருத்தல்மட்டும் எடுக்கப்படவேண்டும் என்பதை கவனித்துக் கொள்ளவும். 4 ருத்தல் வெங்காயத்தின் பெறுமதி உத்தரவாதத் திட்டத்தின் கணக்குப்படி ஓர் அங்கத்தவரின் பெயரால் வரவுவைப்பதற்கு 'சேமிப்பாக' கிடைக்கிறது. உதாரணமாக 1 ருத்தல்வெங்காயம் 30 சதம் விலையாக இருந்தால் அங்கத்தவரிடமிருந்து எடுக்கப்பட்ட ஒவ்வோர் அந்தர் வெங்காயத்திற்கும் ரூபா 1-20 சேமிப்பாகக் கொடுபடல்வேண்டும். அப்போது சங்கம் காய்வனவை ஈடுசெய்வதற்கென 6ருத்தல் வெங்காயத்தை வைத்திருக்கக்கூடியதாய் இருக்கும். அங்கத்தவரிடமிருந்து பாரமெடுத்த விளைபொருட்களுக்கென கொடுக்கப்படும் பற்றுச்சீட்டில் மேற்படி விபரங்கள் காட்டப்படல்வேண்டும். இப்படிச் சேர்க்கும் சேமிப்புகளுக்கு எல்லா அங்கத்தவர்களுக்கும் பாஸ்புத்தகம் வழங்கப்படவேண்டும்" என வலி. மேற்கு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. பூ.குமாரசுவாமி சுற்றுநிருபமொன்றை வலி. மேற்கில் உள்ள கூட்டுறவுச்சங்கங்களுக்கு அனுப்பிவைத்துள்ளார்.


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

வயாவிளான் பலாலி தெற்குப் ப.நோ. கூ. சங்கத்தில் 1-12-67 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு 2 மா, தூள் அரைக்கும் இயந்திரங்களும், 1 கோழித்தீன் கலக்கும் இயந்திரமும், கோழித்தீன் உற்பத்திப் பொருட்களும் விற்பனைக்குண்டு. 2137

வீடும் காணியும்

மணிக்கூட்டு வீதியில் (லேன்) இருக்கும் 27/1, இலக்க வீடும், 2 1/2 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: P. சிவசுப்பிரமணியம், 27/1, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 2138


## உடுப்பிட்டி கி. ச. வரவு-செலவு அறிக்கை

உடுப்பிட்டி, ஞாயிறு

உடுப்பிட்டிக் கிராமசபை உறுப்பினர்கள் கிராமசபையின் வரவு-செலவுத் திட்ட அறிக்கை கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னரே தங்களிடம் ஒரு பிரதி வழங்கவேண்டுமென்று தலைவரிடம் விடுத்த கோரிக்கையையடுத்துச் சகல அங்கத்தவர்களுக்கும் வரவு-செலவு அறிக்கை விபரம் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## பேச்சுவார்த்தை பயனளித்தது

கொழும்பு, ஞாயிறு

பீக்கிங்குடன் செய்துகொண்ட 5 வருட ரப்பர்—அரிசி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுவிட்டு வர்த்தக அமைச்சர் டாக்டர் எம். வி. பி. பீரிஸ், இலங்கைக்கும் பீக்கிங்குமிடையில் உள்ள ரப்பர் அரிசி பேச்சுவார்த்தைகள் பயனளித்திருப்பதாகத் தெரிவித்துள்ளார்.


## இப்பொழுது நடைபெறுகிறது

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]

தினசரி பி.ப. 2-30, மாலை -20, இரவு 9-30 மணிக்கு

பிளாஸா [வெள்ளவத்தை] — கெப்பிட்டல் [கொழும்பு]

மைலன் [கொட்டாஞ்சேனை]

விஜயா [மட்டுநகர்] — ஸ்ரீகிருஷ்ணா [திருமலை]

மற்றும் நாலு திரைகளில்

எம். ஜி. ஆரும், ஜெமினி கணேசனும்

முதல்முறையாக சேர்ந்து நடித்து வெற்றி கண்ட இன்பச் சித்திரம்!

கடமைக்கும் பாசத்திற்கும் நடுவே சிக்கித்தவிக்கும் ஒரு பொலிஸ் அதிகாரியின் உணர்ச்சியூட்டும் சித்திரம்! 100 நாட்களுக்கு மேல் ஓடி தென்னகத்தில் பல்லாயிரக் கணக்கான மக்களின் பாராட்டைப் பெற்ற சித்திரம்.

மற்றும்



ஜெயலலிதா, ஜெய்ந்தி

நம்பியார், அசோகன்,

நாகேஷ், ஸ்ரீராம்,

மனோரமா,

பி. கே. சரஸ்வதி

நடித்த

தேவர் பிலிம்ஸ்

# முகராசி

டைரக்ஷன் எம். ஏ. திருமுகம்

இசை: திரை இசைத்திலகம் கே. வி. மகாதேவன்

6-வது வாரம்

கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை] — லக்ஷ்மி [கரவெட்டி]

ஜெய்சங்கர் — ஜமுனா — நாகேஷ் — பேபி பத்மினி நடித்த

ஏ. வி. எம்மின் ஜனாதிபதி பரிசுபெற்ற

குழந்தையும் தெய்வமும்



நியூ காலிங்கன் [இணுவில்]

தினசரி 6-30, 9-30 மணி

விடுமுறைதினங்களில் 2-30

ராமராவ் - ராஜசுலோசனா நடித்த

ராஜசேவை

மனோகரா யாழ்ப்பாணம்

Daily at 4-45, 7-00, & 9-45p.m.

Billy Fury - Michael Medwin in

Wonderful Day

in Color & Scope

Also Showing

World Cup Final Football England vs. W. Germany

REGAL JAFFNA

Daily at 4-45, 7-00 & 9-45 p. m.

Only

Dana Andrews in

M. G. M.

32 MILES TO TERROR in Colour.



## வேண்டுகோள்

மட்டுவில் வடக்கு பன்றித்தலைச்சி கண்ணகையம்மன் கோவில் அசையாமணி, மணிக்கூட்டுக்கோபுர வேலைகளை முடிப்பதற்கு 12,000 ரூபாய் வேண்டியுள்ளது. (இதுவரை சேர்ந்த பணம் ரூ. 2,830) ஆகவே அன்பர்கள், அடியார்கள் இயன்றளவு பண உதவிசெய்து பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். பணம் அனுப்ப வேண்டிய முகவரி: சி. சிவகுரு, மனேஜர், பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் கோவில், மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

இ. சிதம்பரப்பிள்ளை, ஆலய பரிபாலன சபைத் தலைவர்.

சி. செல்லத்துரை, சி. சிவகுரு. தர்மகர்த்தாக்கள்.

மட்டுவில், 18-11-67.

337



இனம் இனம் இனம்

பி. பி. பி. பென் இனம்

எங்களிடம் பொன்ட்'ஸ் பவுடர் வாங்கிப் பொன்ட்'ஸ் போட்டியில் பரிசுபெறுபவர்களுக்கு ஒரு பி. பி. பி. பென் இனம்.

இன்றே எங்கள் ஸ்தாபனத்தில் பொன்ட்'ஸ் பவுடரை வாங்குங்கள்.

ராஜா ஸ்ரோர்ஸ்

போன் 372 — 67-69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். — தந்தி ராஜா


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சைப்பிரஸில் அமைதி நிலைநாட்ட உதவுமாறு யூ தாண்ட் கோரிக்கை

நியூயோர்க், நவ. 19

ஐ. நா. பொதுக்காரியதரிசி யூ தாண்ட், நேற்று சைப்பிரஸ், கிரீஸ் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசினார்.

சைப்பிரஸிலுள்ள ஐ. நா. சமரசக் கமிஷனுடன் ஒத்துழைத்து, அப்பகுதியில் அமைதியை நிலைநாட்ட உதவுமாறு அவர்களை அவர் வேண்டிக்கொண்டார்.

இதற்கிடையில், சைப்பிரஸ் வானப் பிராந்தியத்தை துருக்கி விமானங்கள் அத்துமீறியதாகக் கிரீஸ் புகார் செய்துள்ளது.

கிரீசுக்கெதிராகஇராணுவ நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் துருக்கி பயமுறுத்தியிருப்பதுடன், அத்தகைய நடவடிக்கைக்கான முஸ்தீபுகளில் இறங்கியுள்ளதாகவும் செய்திகள் கூறுகின்றன.

கடந்த வெள்ளிக்கிழமை கூடிய துருக்கிப் பார்லிமெண்ட், சைப்பிரஸ் உட்பட அந்நிய நாடுகளுக்குத் துருக்கித் துருப்புகளை அனுப்புவதற்கு அரசாங்கத்துக்கு அதிகாரமளித்துள்ளது.

## அகில இந்திய ரேடியோ நிர்வாகம்பற்றி தீர்மானம்

புதுடில்லி, நவ. 19

அகில இந்திய ரேடியோவை, இந்திய மத்திய அதிகாரத்திலிருந்து எடுத்து, அதைத் தனித்தனி சுயேச்சை நிறுவனங்களின் கீழ் நடத்த உத்தேசிக்கும் ஒரு தீர்மானம், இன்னும் இரண்டு நாட்களில், பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்படுமெனத் தெரிகிறது.

அத்துடன், வானொலி ஒலிபரப்புக்கான ஒழுங்குமுறையொன்றும் தயாரிக்கப்பட்டுவருவதாகச் சொல்லப்படுகிறது.

## இலங்கைக் குருடர்களுக்கு "பேசும் நூல்" கருவிகள் பிரிட்டிஷ் தயாரிப்பு

லண்டன், நவ.19

குருடர்களுக்குப் பெரிதும் பயனுள்ளதான 'பேசும் நூல்'' எனப்படும் நவீன கருவிகள் பிரிட்டனில் உற்பத்தி செய்யப்படவிருக்கின்றன. சட்டைப் பைக்குள் கொண்டு செல்லத்தக்க இந்தநவீன சாதனத்தை குருடர்களுக்கான பிரிட்டிஷ் ரோயல் தேசிய நிறுவனம் உற்பத்தி செய்யவிருக்கின்றது. சுமார் 13 நாடுகள் இந்த சாதனங்களை பெறுவதற்கான கோரிக்கைகளை விடுத்திருக்கின்றன.

இந்த சாதனத்தின் எடை 6 1/2 அவுன்ஸ்தான். 13 மணிநேரம் வரை வாசிக்கக் கூடிய பதிவு நாடாக்கள் இந்தக் கருவியில் பொருத்தப்பட்டிருக்கின்றன.

குருடர்களுக்கான பிரிட்டிஷ் ரோயல் தேசிய நிறுவனம் இந்த 'பேசும் நூல்' இயந்திரத்தை 1935-ம் ஆண்டுமுதலாக உருவாக்கியது. இந்தக்கருவியில் இப்போது பெரிதும் முன்னேற்றம் காணப்பட்டிருக்கிறது. இன்று பிரிட்டனில் 22,000 குருடர்கள் இந்தச் சாதனத்தைப் பாவித்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படி நிறுவனம் குருடர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் பல நவீன இயந்திர சாதனங்களை உற்பத்தி செய்வதில் இன்று முன்னணி வகித்து வருகிறது. இலங்கை, இந்தியா உட்பட பல நாடுகள் இந்த நிறுவனத்திடமிருந்தே நவீன கருவிகளைப் பெற்றுவருகின்றன.

நவீன ரகமான 'பேசும் நூல்' இயந்திரங்களுக்கு இலங்கையும் இந்தியாவும் சமீபத்தில் கோரிக்கைகளை விடுத்துள்ளன வென்றும் இந்தச் சாதனங்கள் இன்னும் ஓரிரண்டு மாதங்களில் அனுப்பி வைக்கப்படுமென்றும் பிரஸ்தாப நிறுவனத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# பெல்கிரேட் பஸ் விபத்தில் 42 பேர் உயிரிழந்தனர்

பெல்கிரேட், நவ. 19

பெல்கிரேடுக்கு தென்மேற்கில் குறுகிய ரஸ்தாவில் ஒரு பஸ்ஸும் டிரக்கும் மோதிக் கொண்டதையடுத்து அந்த பஸ் நதியினில் உருண்டு விழுந்தது. இவ்விபத்தில் 42 க்குமதிகமானோர் மாண்டனர்.

பஸ்ஸில் 52 பிரயாணிகள் இருந்தனர். 7 பேர்மட்டுமே உயிர் பிழைத்ததாக அதிகாரப்பற்றற்ற தகவல்கள் கூறுகின்றன.

கிரேனின் உதவியுடன் பொலிஸார் பஸ்ஸை வெளியே எடுத்துச் சடலங்களை மீட்டனர்.

## தீப்பிடித்து பெண் மரணம்

சென்னை, நவ. 19

உடல் முழுவதும் தீக்காயங்களுடன் கடந்தமாதம் 23-ல் சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட அலமேலு என்ற பெண் (வயது 18) நேற்றிரவு காலமானார்.

சமையல் செய்துகொண்டிருந்தபோது அவளது புடவையில் தீப்பிடித்துக் கொண்டுவிட்டதாகச்சொல்லப்படுகிறது.

## கள்ளச்சாராயத்துக்கு 8 பேர் பலி

கல்கத்தா, நவ. 19

கல்கத்தாவில், கள்ளச் சாராயம் குடித்த 8 பேர் மரணமாகினர். மற்றும் 6 பேர், அபாயகரமான நிலையில், ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பொலீஸார், புலன் விசாரணைசெய்துவருகிறார்கள்.

## லண்டனில் காந்தி சிலை

லண்டன், நவ. 19

அடுத்தவருட ஆரம்பத்தில், லண்டன் டாவிஸ்டாக் சதுக்கத்தில் மகாத்மாகாந்தியின் வெண்கல உருவச்சிலையொன்று திறந்து வைக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுவதாக பிரிட்டிஷ் தகவல் நிலையம் கூறியது.

இந்தச் சிலையின் திறப்பு விழாவுக்கான ஏற்பாடுகள் விரைவில் செய்யப்படும் என்று மகாத்மா காந்தி நினைவு டிரஸ்ட் கமிட்டி தலைவர் சோரன்ஸன் பிரபு கூறினார்.

## செங்கல்பட்டில் தீ விபத்து

செங்கல்பட்டு, நவ. 19

எட்டாவது வார்டு தட்டான்மலைப்பகுதியில் நேற்று மாலை திடீரென்று ஒரு குடிசையில் தீப்பற்றிக்கொண்டது. தகவல் கிடைத்ததும் தீயணைக்கும் படையினர் உடன்வந்து, மேலும் தீ பரவாது தடுத்தனர்.

இத்தீவிபத்தினால், இரண்டு குடும்பங்கள் பாதிக்கப்பட்டன. அந்தப்பகுதி மக்களிடையே பீதி ஏற்பட்டுள்ளது.

## காத்திருந்தவர் ஆத்திரப்பட்டனர்

வெலிகம, ஞாயிறு

பால் உணவுகளுக்காக கியூவில் பல மணி நேரமாகக் காத்திருந்தவர்கள் இருகடைகளில் வியாபாரம் ஆரம்பிக்காததால் ஆத்திரமடைந்து உள்ளே சென்று மனேச்சரை தாக்க முயன்றனர். இதனால் கியூவில் நின்றபெண்களும் கர்ப்பிணிகளும் பெருங் கஷ்டமடைந்தனர். பொலிஸார் விரைந்து நிலைமையைச் சமாளித்தனர்.

## "ஈழத்து கவிதை உலகில் ஒளியூட்டினார்"

மானிப்பாய், ஞாயிறு

''கவிஞர் ச. நவரத்தினத்தின் (கற்கையாளன்) அகால மறைவை அறிந்து ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகம் அதிர்ச்சியுற்றது. ஈழத்து இளங்கவிஞர்களின் வரிசையில் அவர் முன்னணியில் நின்று ஈழத்துக் கவிதையுலகிற்கு ஒளியூட்டும் வகையில் சிறந்த பணியாற்றினார். அன்னாரது பிரிவு ஈழத்து இலக்கிய உலகிற்குப் பேரிழப்பாகும்'' என யாழ். இலக்கியவட்ட இணைச்செயலாளர் யாழ்வாணன் அனுப்பியுள்ள அனுதாபச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## வருடாந்த மகாநாடு

காலி, ஞாயிறு

அகில இலங்கை பௌத்த காங்கிரஸின் 49-வது வருடாந்த மகாநாடு அடுத்த மாதம் 28-ம், 29-ம், 30-ம் திகதிகளில் காலி வை எம். பி. ஏ. மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

# தமிழகத்துக்கு பருப்புவகை தங்குதடையின்றி கிடைக்கும்

## சென்னை அரசு எடுத்த நடவடிக்கையின் எதிரொலி

புதுடில்லி, நவ. 19

தனது ராஜ்யத்துக்கு வெளியே வெல்லம் அனுப்பப்படுவதைத் தடைசெய்வது என்று சென்னை அரசாங்கம் செய்த முடிவினால் மத்திய அரசுக்கும் சென்னை அரசுக்குமிடையே உருவாகிக் கொண்டிருந்த புயல், இப்போது ஓய்ந்துவிட்டதாகத் தெரிகிறது.

தமிழகத்தில் வெல்லம் விலை ஏகமாகவேஉயர்ந்ததே ராஜ்ய அரசின் முடிவுக்குக் காரணமென்று கூறப்பட்டது. பருப்பு வகைகளை மற்ற மாநிலங்களுக்கு அனுப்புவதற்குத் தடைவிதித்து மற்ற ராஜ்யங்கள் உத்தரவு பிறப்பிக்காமல் தடுக்கமத்திய அரசு தவறிவிட்டதால் இந்த நடவடிக்கையைத் தான் மேற்கொள்ளவேண்டியிருந்தது என்றும் சென்னை அரசு கூறியிருந்தது.

### போதுமான பருப்புவகை

சென்னை ராஜ்யத்துக்குப் போதுமான பருப்புவகைகளை அனுப்புவது சம்பந்தமாக அவற்றை உற்பத்தி செய்யும் ராஜ்யங்களுடன் மத்திய உணவு, விவசாய மந்திரி திரு. ஜகஜீவன்ராம் தொடர்புகொண்டிருப்பதாகத் தெரியவருகிறது. சென்னைக்கு இனி அதற்குத் தேவையான பருப்புவகைகள் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது

வெல்ல நடமாட்டத்துக்குத் தடைவிதிக்கும் உத்தேசம் இல்லை என்றும் அதன் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதே நோக்கம் என்றும் சென்னை ராஜ்ய அரசினர் இப்போது விளக்கியுள்ளனர்.

# விஜயவாடாவில் கொலையும் கத்திக்குத்து சம்பவங்களும்

விஜயவாடா, நவ. 19

நேற்றுமுன்தினம் நிகழ்ந்த கொலை, கத்திக்குத்து சம்பவங்களையொட்டி 3 வலதுசாரி கம்யூனிஸ்டுகளையும், 5 இடதுசாரி கம்யூனிஸ்டுகளையும் நேற்றுப் பொலிசார் கைதுசெய்தனர்.

வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியைச்சேர்ந்த மற்றும் 6 பேர் 8 தினங்களுக்குக் காவலில் வைக்கப்பட்டனர்.

பொண்டல்படி சென்னையா என்பரை வலதுசாரி கம்யூனிஸ்டுகள் எனப்படும் ஒரு கோஷ்டி நேற்று முன்தினம் மாலை கம்புகளாலும், கத்தியாலும் தாக்கியதாகவும் அவர் ஆஸ்பத்திரியில் இறந்துவிட்டதாகவும் சொல்லப்படுகிறது.

நள்ளிரவில் ரிக்ஷா தொழிலாளர் சங்கத்தலைவர் கணபதி என்பவர் கத்திக்குத்துக்கு ஆளானார். அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். அவர் ஓர் இடதுசாரி கம்யூனிஸ்ட் ஊழியர் எனக்கூறப்பட்டது. இது சம்பந்தமாக வலதுசாரி கம்யூனிஸ்டுகள் எனப்படும் மூவரைப்பொலிஸார் கைதுசெய்தனர். கணபதி நிலைமை கவலைக்கிடமாகவுள்ளது.

## ஏடனின் எதிர்காலம்

கெய்ரோ, நவ. 29

தென்அரபிய சமஷ்டியின் தேசிய விடுதலை முன்னணிக் கட்சியின் தலைவரான திரு. சபா, சுதந்திரம் பெறும் ஏடன், சாம்ராஜ்ய நாடுகள் சங்கத்தில் அங்கம்வகிக்காது என இங்கு பத்திரிகையாளரிடம் கூறினார்

## மொழிபற்றிய போராட்டம்

புதுடில்லி, நவ. 19

மொழியின் அடிப்படையில் நடாத்தப்படும் போராட்டம் எதுவும் நாட்டுக்குத் தீமையேயன்றி நன்மை விளைக்காது என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி, நேற்று இங்கு பத்திரிகையாளர் மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டார்.

## கால்வாயில் பஸ் விழுந்தது இருவர் மாண்டனர்

ஜம்மு, நவ. 19

பிரயாணிகளை ஏற்றிச் சென்றபஸ் ஒன்று வழுக்கிக் கால்வாயில் விழுந்ததன் விளைவாக 2 பேர் உயிரிழந்தனர். 12 பேர் காயமடைந்தனர்; அக்னூர் அருகே நேற்றுமாலை இப்பரிதாப விபத்து நிகழ்ந்தது.

நான்கு பிரயாணிகளைக் காணோம் என்று கடைசியாகக் கிடைத்த தகவல் கூறியது. காஷ்மீர் மந்திரிகள் இருவர் விபத்து நடந்த இடத்துக்கு விஜயஞ் செய்தனர்.

மொழி பற்றிய

# நேரு வாக்குறுதியை அமுலாக்க அரசியற் சட்டத்திருத்தம் வேண்டும்

## திருச்சியில் தமிழக சட்ட மந்திரி

திருச்சி, ந. 19

இந்தி பேசாத பகுதி மக்களுககு நேரு அளித்துள்ள வாக்குறுதியைச் சொல்லளவில் மட்டுமின்றி, மனப்பூர்வமாக அமுல் நடத்தவேண்டுமென்றும், அதற்காக அரசியல் சட்டத்தைத்திருத்தினால்தான் முடியுமென்றும் தமிழக சட்ட மந்திரி திரு. எஸ். மாதவன் நேற்று திருச்சியில் நிருபர்களிடம் கூறினார்.

இந்தி பேசாத மக்கள் [illegible] வருமென்று காலஞ்சென்ற பிரதமர் நேரு உறுதியளித்திருக்கிறார் என்றும் திரு. மாதவன் குறிப்பிட்டார்.

### முன்னிருந்த நிலைமை

அவர் மேலும் கூறியதாவது:- 'நமது அரசியல் சட்டத்தின்படி 1965 ஜனவரி 26-ந் திகதி இந்தி ஆட்சிமொழியாகிவிட்டிருக்கிறது. பார்லிமெண்டில் கொண்டுவரப்படவிருக்கும் ஆட்சிமொழி திருத்தச்சட்டம்ஆங்கிலமும் நீடிக்கலாம் என்று மட்டுமே கூறுகிறது. நேருவின் உறுதிமொழியானது 1965 ஜனவரி 26-ந் திகதிக்கு முன்பு ஆட்சிமொழி பற்றி இருந்த நிலைமையை மீண்டும் ஏற்படுத்துவதற்கு சமமாகும். அரசியல் சட்டத்தைத் திருத்தினால்தான் இதைச் செய்யமுடியும்.

தற்போது வரவிருக்கும் ஆட்சிமொழி மசோதா பிரதமர் நேரு, இந்தி பேசாத மக்களுக்கு அளித்துள்ள வாக்குறுதியை நிறைவேற்றி வைப்பதாகும் என்று காங்கிரஸ் அக்கிராசனர் திரு. காமராஜ் போன்ற சிலர் கூறுவது போலியாகும்.'

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

முடிவில் இன்பம் கொடுக்கும் தொழிலைச் செய்யும் போது துன்பம் மிகவந்தபோதிலும் துணிவு மேற்கொண்டு செய்து முடிக்கவேண்டும். — திருவள்ளுவர்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்கஷு கார்த்திகைமீ 4உ (20-11-67)

## நாணய மதிப்பு குறைப்பு

பிரிட்டிஷ் அரசாங்கம் தனது நாணயத்தின்மதிப்பைக் குறைத்திருக்கிறது. பவுண் ஸ்டர்லிங்கின் மதிப்பை 14.3 விகிதம் அது குறைத்திருக்கிறது. பிரிட்டனின் பொருளாதார நிலை அதன் ஸ்டர்லிங் மதிப்பைக் குறைக்க வேண்டியநிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளதாகக் கருதப்பட்டது. ஆனல் நாணயமதிப்பைக்குறைப்பதற்கான நிர்ப்பந்தத்திற்குப் பிரதமர் வில்ஸன் பணிய மாட்டார் என்றும் நாணய மதிப்புக் குறைம்பதாக இருந்தால் பிரிட்டிஷ் நிதி அமைச்சர் தமது பதவியை ராஜிஞமாச் செய்யக் கூடுமெனறும் கூறப்பட்டது. ஆயினும் மேற்கு ஆசிய நெருக்கடியின்விளைவாக சூயஸ் கால்வாய் மூடப்பட்டதும், பிரிட்டிஷ் துறைமுகத் தொழிலாளரின் வேலைநிறுத்தம் அமெரிக்காவின் வட்டி விகிதம், பிரிட்டனின் வர்த்தக நிலையும் பொருளாதாரத்தை மோசமாக்க நாணயத்தின் மதிப்னபக் குறைக்க வேண்டியநிர்ப்பந்ததைத பிரிட்டனுக்கு ஏற்படுத்தி இது தவிர ஐரோப்பிய பொதுச் சந்தையில் பிரிட்டன் சேர்வதற்கு எடுத்த முயற்சிகள் பிரஞ்சு அதிபர் ஜெனரல் டி கோலின் எதிர்ப்பினல் தோல்வியடைந்துவந்துள்ள ஐரோப்பிய பொதுச் சந்தையில் சேர்வதற்குப் பிரிட்டிஷ் பிரதமர் வில்சன் உபயோகிக்கும் கடைசி ஆயுதமாகவும் இந்த நாணய மதிப்புக் குறைப்பு இருக்கலாம் என்று கருதவும் இடம் உண்டு.

பிரிட்டனின் நிலை ஒருபுறமிருக்க அதன நாணய மதிப்புக் குறைப்பினல் இலங்கை எவ்விதம் பாதிக்கப்படும். இலங்கையும் தனது நாணயத்தின் மதிப்பைக் குறைத்துக் கொள்ள வேண்டுமா என்ற கேள்விகள் எழுவது நியாயமே. இலங்கையின அண்டை நாடான இந்தியா சில மாதங்களுக்கு முன்னர் தனது ரூபாய் மதப்பைக் குறைத்துவிட்டது. இதனல் நன்மை தான் என்றும் எதிர்பார்த்த பயன் கிடைக்கவில்லையென்றும் இந்தியாவிலேயே இருதரப்பட்ட அபிப்பிராயங்கள் நிலவுகின்றன. இலங்கையைப் பொறுத்தவரை, பிரிட்டனுடனே, இந்தியாவுடனே அது தன்னை ஒப்பிடக்கூடிய நிலையில் இல்லை. இந்தியாவிற்குப் பல பிரச்னைகள் இருப்பினும் தொழில் துறையில் இலங்கையைவிட அது முன்னேறியடைந்துள்ளது. அதன் ஏற்றுமதிப் பண்டங்களும் அதிகரித்துள்ளன. பிரிட்டன் தொழில் துறையினல் வெகுவாக முன்னேற்றம் கண்ட நாடு. அதன் ஏற்றுமதிப் பொருள்கள் அதிகம்.

இலங்கையைப்பொறுத்தவரையில் விவசாயத் துறையிலோ, கைத்தொழில் துறையிலோ வளர்ச்சியடையவில்லை. அத்தியாவசியப் பொருள்கள் அனைத்துக்கும் இறக்குமதியையே இலங்கை நம்பியிருக்கிறது. இலங்கை தனது வர்த்தகத்தை பவுண், ஸ்டார்லிங் கணக்கிலேயே வைத்துள்ளது. இலங்கைமட்டுமல்ல, ஆசிய நாடுகள் பலவும் இதே நிலையில்தான் உள்ளன. எனவே பிரிட்டனின் நாணய மதிப்புக் குறைப்பு இலங்கையைப் பாதிக்கவேசெய்யும்.

இதற்காக இலங்கையும் தனது நாணயத்தின் மதிப்பைக்குறைக்கவேண்டும். ஆனல் நமது நாணயத்தின் மதிப்பைக் குறைததால்இறக்குமதிப் பொருள்களின் விலை உயரும். இதை ஏற்றுமதிப் பொருள்களின் வர்த்தகத்தை அதிகரிப்பதன் மூலம் சரிக்கட்டமுடியும். ஆனல் இலங்கையைப் பொறுத்தவரையில் தேயிலையும் ரப்பருமே ஏற்றுமதிப்பொருள்களாகும். அவற்றுக்கும் உலகச்சந்தையில் போட்டி அதிகம்.

எனவே நாணயத்தின் பெறுமதியைக் குறைத்தால் இறக்குமதிப்பொருள்களைக் குறைக்கவேண்டும். இங்கு அத்தியாவசியப்பொருள்களே இறக்குமதியில்தான் தங்கியிருக்கின்றன. பொருள்களின் விலை உயர, கூலியும் உயரும், இதர பொருள்களின் உற்பத்திச்செலவும் உயரும் ஏற்கனவேமோசமடைந்துள்ள நாட்டின் பொருளாதாரம், நெருக்கடியான, அவலமான நிலையை அடையும். இதைத்தடுக்க வழியென்ன?

## இன்றைய பலன்

20-11-67
திங்கட்கிழமை
கார்த்திகை மாதம்
4-ந் திகதி

நட்சத்திரம்- மிருகசீரிடம். பகல் 8-56 மேல் திருவாதிரை.
திதி- திருதியை பி. ப. 2-49 மேல் சதுர்த்தி.
சுபநேரம்- 12-09—1-89.
ராகுகாலம்- 7-39—9-09.
மேஷம்- நற்செய்தி கேட்டல், நல்ல முடிவு.
ரிஷபம்- சிநேகிதர் பீடை, சிந்தனை மிகுதி.
மிதுனம்- ஏமாற்றம் தாக்கும், விழிப்புடன் இரு.
கடகம்- இன்சொல் இயம்புதல், இனசன மகிழ்ச்சி.
சிம்மம்- அகால போசனம், அவதியுமுண்டு.
கன்னி- அன்னையின் ஆசி, அரசபோகம்.
துலாம்· புத்திரர் புகழ், புதுமையில் நாட்டம்.
விருச்சிகம்- பகை மூட்டம், பார்த்து நட.
தனுசு- விழிகள் மோதும் வித்திடும் காதல்.
மகரம்- மேலிடத்து எதிர்ப்பு, தொழில் கவலை.
கும்பம்- தாராள சிந்தை, தந்தை வழி ஆதரவு.
மீனம்- பிரயாண விருப்பு, பிறர் சகாயம்.

—சோதிடக் கலாநிதி—
திருமலை வேலுப்பிள்ளை

## இலங்கையிலும்
# நாணய மதிப்பு குறை[ப்பால்] தொழிலாளர், விவசாயிக[ள்]

இலங்கையின் ஏற்றுமதி சராசரி 60 வீதம் பிரிட்டன் மூலம்தான் செய்யப்படுகிறது. இங்கும் நாணய மதிப்பு குறைப்பு செய்யாவிடில் இந்நாட்டு வருமானம் குறையும். அதனல், விவசாயிகளும் தொழிலாளர்களும் அதிகம் பாதிக்கப்படுவார்கள். ஏற்கனவே றப்பர் தேயிலை விலை குறைந்திருக்கிறது. இந்நிலையில் இலங்கை மக்கள் மேலும் பாதிக்கப்படுவார்கள்.

இந்தியாவில் நாணய மதிப்பு குறைப்பு ஏற்பட்ட சமயம் இலங்கையிலும் 24 வீதம் நாணய மதிப்பு குறைக்க வேண்டும் என்ற பேச்சு அடிபட்டது. ஆனல் குறைக்கப்படவில்லை இன்று எழுந்துள்ள நிலையில் பிரிட்டனில் குறைக்கப்பட்ட அளவு இங்கும் குறைப்பது நல்லது. இங்கு 24 வீதம் குறைக்க வேண்டுமென்பது எனது கருத்து. அப்படியென்ருல்தான் நமது நாடு முன்னேற வழியுண்டு.

பிரிட்டனில் நாணய மதிப்பு குறைப்பினல் உடனடியாக அங்குள்ள நாணயங்களுக்கும் மற்ற நாணயங்களுக்குமுள்ள பெறுமதி 14.3 வீதத்தில் மாற்றமடையும், இதனல் ஏற்றுமதி மூலம் பிரிட்டனுக்கு அதிக வருமானம் கிடைக்கும். இறக்குமதி சாமான்களின் செலவுகள் அதிகரிக்கும்.

ஏற்றுமதியினல் வருமானம் அதிகரிக்கும் அதே வேளையில் இறக்குமதியால் நஷ்டம் ஏற்படும். பிரிட்டன் வெளிநாடடு நாணயத்தை சேமிக்க வழியுண்டு,

இந்த நிலைமையை இங்கு சீராக்குவதற்கு அதே வீதத்தால் நாணய மதிப்பைக் குறைக்கவேண்டிய நிலை ஏற்படும். அப்படி செய்யாவிடில் இலங்கைக்கு ஆபத்து ஏற்படும். இங்கும் ஏற்றுமதிப்பொருட்களுக்கு குறைந்த வருமானம் கிடைக்கக் கூடியநிலைஏற்படும். நாணய மதிப்பைக் குறைத்தால் இந்த நிலையை சரிக்கட்டிக் கொள்ளலாம்.

இலங்கை அரசாங்கம் கூடிய விரைவில் நாணய மதிப்பு குறைப்பு செய்யாவிடில் இந்நாட்டிலுள்ள ஏழை பொதுமக்கள், குறிப்பாக விவசாயிகளும் தொழிலாளர்களும் பாதிக்கப்படுவார்கள்

இதனல் ஏற்படும் நி
மையை சமாளிக்கக் கூடி
நடவடிக்கைகளை எடுக்கா
பட்சத்தில் நிலைமை மேலு
மேலும் மோசமடையுமா
லால் நாணயத்தின் பெ
மதி மேலும்மோசமடையு
இந்நிலையை சிராக்குவதற்
ஒருவழி நாணயத்தின் உத்
யோகப் பெறுமதியை
குறைத்தலே.

உதாரணமாக ஒ
பவுண்ட் 5 டொலருக்
மாற்றப்பட்டால், பெறும
இறக்கத்தின்பின் 4 டொ
ருக்கு மாற்றப்படுத
பவுண்டின் பெறுமதி இ

— அ. விசுவ
'ஆரம்ப பொரு

கத்தை விளக்கும். இ
பெறுமதி இறக்கத்தி
காரணமாக இறக்கும
பொரு ளின் வில
ஏற்றும பொரு களி
விலை குறையும் என
பொதுப்படையாகக் கூ
லாம். உதாரணமாக 10
டொலர் பெறுமதியுடை
இறக்குமதிப் பொருளி
விலை 20 பவுண்டிலிருந்
25 பவுண்டாக ஆகு
அதேபோல் 100 பவுண்
பெறுமதியான ஏற்றுமதி
பொருளின் விலை 50
டொலரிலிருந்து 400 டொ
ராகக்குறையும், இவ்வா
நாணயத்தின் பெறும
யைக்குறைத்து இறக்கும
யைக் கட்டுப்பாட்டின்மூல

# யாழ்ப்பாணம் பிறந்த கதை

— திருமுருக கிருபானந்தவாரியார் —

தொண்டை நன்நாட்டில் பொன்விளைந்த களத்தூர் என்ற ஊர் பாலாற்றின் கரையில் வழமை குன்ருமல் விளங்கிக்கொண்டிருக்கின்றது. அந்த ஊரில் பல புலவர்கள் தோன்றினர்கள். நளவெண்பா பாடி நாட்டுக்கே நலஞ்செய்த புகழேந்தி அந்த ஊரில் தோன்றினவர்.

இத்தகு வித்தகம் நிறைந்த அந்த ஊரில் சைவ மரபில் ஒரு மகன் தோன்றினன். அவனுக்கு வீரராகவன் என்று பெயர் சூட்டினர்கள். எண்ணற்ற குண நலன்கள் நிறைந்த அவர் கண்ணற்றவராக இருந்தார் அதனல் அந்தகக் கவிவீரராகவமுதலியார்என்று பெயர் பெற்றுர் தன் அறிவுத் திறமையினல் தமிழ்நூல் பலவும் கற்று பெரும புலவராக விளங்கினர். பலப் பல அரசர்களையும், செல்வர்களையும் சந்தித்து பரிசில்கள் பல பெற்றுர்.

உலகில் மாமிக்கும், மருகிக்கும் எப்போதுமே ஒற்றுமை குறைவாக இருப்பது இயல்பு. அதனல் லட்சுமி உள்ள இடத்தில் கலைமகள் இருக்கமாட்டாள். கலைமகள் உள்ள இடத்தில் திருமகள் தங்கமாட்டாள். எனவே பழங்காலத்துப் புலவர்கள் பெரும்பாலும் வறுமையாகிய சிறுமையால் வாடி வருந்தினர்கள். இந்த விதிப்படி அந்தகக் கவிக்கும் மிடி என்ற ஒரு பாவி வெளிப்பட்டுக் கொடிய துன்பத்துக்கு ஆளாக்கினன்.

அந்தகக்கவி தன் மனைவியிடம் நான் ஈழநாடுசென்று பொருள்தேடி வருவேன் என்று விடை பெற்றுக் கொண்டு கட்டமுதுடன் புறப்பட்டார்.

ஒரு குளக்கரையில் கட்டமுதை வைத்துவிட்டு நீராடி, நீருடி சிவசிந்தனையில் அமர்ந்தார். கட்டமுதை ஒரு நாய் வந்து தூக்கிக்கொண்டு போய்விட்டது இதைக் குறிப்பினல் அறிந்த புலவருக்கு வயிற்றில் பசித்தீ எழுந்து கொழுந்துவிட்டெரிந்தது. புலவர்கள் துன்பம் நிறைந்தபொழுது இன்பமான கவிகளைப் பாடுவார்கள். உடனே புலவர் வாயில் ஒரு செந்தமிழ்ப் பாடல் மலர்ந்தது.

''சீராடையற்ற வைரவன்
வாகனம் சேரவந்து
பாராரு நான்முகன்
வாகனந்தன்னைமுன்
பற்றிக்கௌவி
நாராயணனுயர் வாகன
மாயிற்று. நம்மைமுகம்
பாரான் மைவாகனன்
வந்தே வயிற்றில்
பற்றினனே.'

தண்ணீரைப் பருகிவிட்டு சிவ சிவா என்று புறப்பட்டார். ஈழநாடு வந்து சேர்ந்தார். அப்பொழுது ஈழநாட்டில் பரராஜசிங்கம் அரசு புரிந்துகொண்டிருந்தார். அவரைக்கண்டு பரிசில் பெறும்பொருட்டு தன் சீடனுடன புலவர்பெருமான் அரண்மனைக்குச்சென்ருர். அங்கிருந்த சிப்பந்திகள் கண்ணில்லாதவரை அரசன் பார்க்ககூடாது, அது அமங்கலம் என்று கருதி அவரைத் தடுத்துவிட்டார்கள். புலவர் மிகவும் வருந்தி பலநாள் இடர்ப்பட்டார். தக்கவர் ஒருவர் மூலம் அரசனுக்குத் தன் வரவை அறிவித்தார். அரசர் திரையிட்டு திரைக்கு வெளியேயிருந்து சந்திக்குமாறு ஏற்பாடு செய்தார்.

புலவர் தன் சீடருடன் அரசனுக்கு முன் சென்ருர். சீடன் திரையைப் பார்த்து அதனைத் தன்குருநாதனுக்கு அறிவிக்க வேண்டுமென்று கருதி ''சிவசிதம்பரம்'' என்ருன். இதன்பொருள் சிதம்பரத்தில் ரகசியத்தில் திரையிட்டிருக்கிற தென்பதாகும்.

'சிவசிதம்பரம்' என்றவுடன் அதன் பொருளை விளங்கிக்கொண்டபுலவர் 'அண்ணமலை' என்ருர். உடனே திரை தீப்பிடித்துவிட்டது. ''அண்ணமலை'' நெருப்புமயம் அதனல் திரை நெருப்பில் எரிந்துவிட்டது. இதனைப் பார்த்த அரசன் அஞ்சினன். அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. சீடன் ஏதோ கூறினன். புலவர் 'அண்ணமலை' என்றவுடன் திரைபற்றி எரிந்ததே. இவர் பெரியவர் என்று மதித்தான். புலவரே! வாருங்கள் இருங்கள் என்ருன்.

புலவர்:- புரவலரே! எனக்குக் கண்ணில்லையானலும், அறிவுக்கண் இருக்கின்றது. என்னை நீங்கள் பார்க்கக் கூடாதென்று திரையிட்டது நியாயமா: என்று கேட்டார்.

அரசர் ''பாவலரே! நான் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறேன் என்று சொல்லமுடியுமா?'' என்று வினவினர். அப்பொழுது அரசர் வில் ஏந்திக்கொண்டிருந்தார். அறிவையே கண்ணக உடைய அருந்தமிழ்ப் புலவர் உடனே ஒரு நேரிசைவெண்பா பாடினர்.

வாழும் இலங்கைக்கோ
மானில்லை, மானில்லை
ஏழு மராமரமோ
இங்கில்லை— ஆழி
அலையடைத்த செங்கை
அபிராமா இன்று
சிலையெடுத்த வாறெமக்
குச் செப்பு.

அழகிய அரசரே நீர் வில்லேந்தி நிற்கின்றீரே இங்கே இலங்கைக் கோமானகிய ராவணனில்லை. மாரீசனகிய மானில்லை. ஏழு மராமரங்களில்லை. உமக்கு யாரும் பகைவரில்லையே. கலை பிடித்து வந்த புலவன் முன்னே சிலை பிடித்து நிற்கின்ற காரணம் யாது. என்ற பொருளில் இந்த வெண்பாவைப் பாடியருளினர்.

இதைக்கேட்ட அரசன் நடுங்கினன். புலவருடைய அறிவுத் திறத்துக்கு பெருமதிப்புக்கொடுத்தான். கடல்சூழ்ந்த ஒருசிறு தீவை யாழில் வல்லவராகிய அவருக்கு பரிசிலாக வழங்கினன். அதனல் அப்பகுதி யாழ்ப்பாணம் எனப் பெயர் பெற்று செழித்தோங்கியது.

## ஆசிரியருக்குக் கடிதங்கள்

# வா[னொலியில்] துவேஷப்[...]

பத்திரிகைகள் மூல
தான் துவேஷத்தைக் க
லாம் என்று எண்ணிவிட
கூடாது. றேடியோவையு
இந்த விஷயத்துக்கு
பாவிக்கலாம என்பல
இப்போது இலங்கையி
சிலர் கண்டுபிடித்துவி
டார்கள் போலத் தோன்
கிறது.

இலங்கைக்குச் 'சிங்க
தீப' என்ற பெயர் எப்ப
வந்தது என்பது பற்றி
கருத்தரங்கு [ஆங்கிலத்தில்
சென்ற சனிக்கிழமை இர
இலங்கை வானெலியி
நடைபெற்றது. இந்
நாட்டில் வேறு இனங்களு
வாழ்கின்றன என்பதை
பிறர் தெரியாமல் மறை
கவோ அல்லது வேறு என்ன
நோக்கத்துடனே இந்
விவாத அரங்கு ஏற்பா
செய்யப்பட்டு நடைபெ
றதோ தெரியவில்லை.

'தேசிய ஐக்கியம்', 'இல
கையர் நாம்' இப்படியெ
லாம் தேர்தல் காலங்கள
லும், அரிசி-உப உணவு
பற்றுக்குறை ஏற்படு
போதும் பேசப்படுகிறது
ஆனல் றேடியோ கருத்
தரங்குகள் மட்டும் ஒ
இனத்தவர் தான் இந்
நாட்டில இருக்கிருர்களெ
வெளிநாட்டவர்கள் என்
னும்படி அமைந்துவிடுகி
றது.

இதனைக் கேட்க யாருமில்
லையா? இலங்கை வானெலி
யில் இப்படிச் சில 'நல்ல
விஷயங்களும் நடைபெற
வதை. தேசிய ஐக்கியத்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ...றைப்பு செய்யாவிடில் ...யிகள் பாதிக்கப்படுவர்

...தனுல் ஏற்படும் நிலை ...யை சமாளிக்கக் கூடிய ...டிக்கைகளை எடுக்காத ...த்தில் நிலைமை மேலும் ...ும் மோசமடையுமாத ... நாணயத்தின் பெறு ...மேலும்மோசமடையும். ...லையை சீராக்குவதற்கு ...ழி நாணயத்தின் உத்தி ...கப் பெறுமதியைக் ...றைத்தலே.

...தாரணமாக ஒரு ...ண்ட் 5 டொலருக்கு ...றப்பட்டால், பெறுமதி ...க்கத்தின்பின் 4 டொல ... மாற்றப்படுதல்; ...ண்டின் பெறுமதி இறக் கட்டுப்படுத்தி, ஏற்றுமதிப் பொருள்களின் விலை குறையுமாதலால், ஏற்றுமதி அதிகரிக்குமாதலால், பாதகமான செல்மதி நிலுவையை ஒன்றில் சமநிலைக்குக் கொண்டுவரலாம் அல்லது சாதகமாக மாற்றலாம்.

நாணயப்பெறுமதிகுறைக்கப்பட்டபின்னர், இறக்குமதி செய்யவேண்டிய அவசியமான பொருள்களின் விலை உயரும். இக்காரணத்தினுல், பெறுமதியைக் குறைக்கு முன்னர் இறக்குமதிப் பொருள்களின் விலை உயர்வதால் ஏற்படக்கூடிய இறக்குமதிசெய்ய அப்பொருட்களின் விலைஉயரும். விலை உயர்வினுல், கூலி உயர்வு நியாயமானதாகும். ஆனுல்கூலி உயர உற்பத்தி செலவு உயரும். இதனுல் பெறுமதி இறக்கத்தினுல் ஏற்படக்கூடிய பலாபலனை இழக்கநேரிடும்.

1949-ம் ஆண்டு பிரித்தானிய அரசாங்கம், பவுண்டின் பெறுமதியைக் குறைத்தபொழுது, அதன் டொலர் பெறுமதி 4.03 லிருந்து 2.80 ஆகக்குறைக்கப்பட்டது. அதாவது ஏறக்குறைய 30 வீதத்தால் குறைக்கப்பட்டது.

— அ. விசுவநாதன் பி. ஏ. —

'ஆரம்ப பொருளியல்' நூல்ஆசிரியர்

...த விளக்கும். இப் ...ுமதி இறக்கத்தின் ...ணமாக இறக்குமதி ...ுளின் விலை ...ரும். ...ும... பொரு...களின் ... குறையும் எனப் ...துப்படையாகக் கூற ... உதாரணமாக 100 ...லர் பெறுமதியுடைய ...குமதிப் பொருளின் ... 20 பவுண்டிலிருந்து ... பவுண்டாக ஆகும்; ...போல் 100 பவுண்ட் ...மதியான ஏற்றுமதிப் ...ருளின் விலை 500 ...லரிலிருந்து 400 டொல ...க்குறையும், இவ்வாறு ...யத்தின் பெறுமதி ...குறைத்து இறக்குமதி ... கட்டுப்பாட்டின்மூலம் நிலைமையையும் ஏற்றுமதி அதிகரிப்பதனுல் ஏற்படக்கூடிய பலாபலன்களையும், நன்கு அலசி ஆராய்ந்த பின்னரே, குறைந்தமாற்று விகிதத்தை தீர்மானிப்பதுடன் தீவிரமான இறக்குமதிக் கட்டுப்பாட்டையும் அமுல் நடத்த வேண்டும். இக்கட்டுப்பாட்டின் மூலம் அநாவசியமான பொருட்களை கூடிய விலைக்கு இறக்குமதி செய்வதிலும்பார்க்க, இறக்குமதி செய்யாமலிருப்பதே மேல்.

நாணயத்தின் மதிப்புக் குறைக்கப்பட்டபின், உணவுப்பொருட்களை இறக்குமதி செய்யாமல் இருக்கமுடியாது. ஆனுல் அவற்றை

## செயலாளர் ராஜினுமா

கொழும்பு, ஞாயிறு

காலி ஐக்கியதேசியக்கட்சி வாலிபமுன்னணி செயலாளர் திரு. ரி. டி. சில்வா, கட்சியிலிருந்து ராஜினுமா செய்துள்ளார். திரு. சில்வா காலிமாநகரசபை உறுப்பினராக இருக்கின்ருர்.

மாவட்டசபை மசோதாவை கொண்டுவர பிரதமர் உத்தேசித்திருப்பதாலும், வாழ்க்கைச்செலவைக் குறைக்கத் தவறிவிட்டதாலும், ராஜினுமாச் செய்வதாக அவர் தெரிவித்துள்ளார்.

## "இனத்திற்கும்நிலத்திற்கும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது'

### பூநகரியில் பண்டிதர் இரத்தினம்

யாழ்ப்பாணம், திங்கள்

பூநகரியில் தமிழரசுக்கட்சிக் கிளையொன்று கிளிநொச்சி பாராளுமன்றஉறுப்பினர் திரு. கா.பொ. இரத்தினத்தினுல் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. இவ்வைபவத்தில் பூநகரி கிராமசபைத்தலைவரும் தமிழரசுக்கட்சிக்கிளைத் தலைவருமான திரு. செல்லத்துரை கலந்துகொண்டார்.

கிளையை அங்குரார்ப்பணம் செய்துவைத்துப் பேசுகையில், திரு. இரத்தினம் குறிப்பிட்டதாவது:-

இன்று தமிழ் இனத்திற்கும் நிலத்திற்கும் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதினுல் பலன்கிடைக்கும் என்று நினைத்தது இன்று சந்தேகத்திற்கிடமாகியுள்ளது. எனினும் ஜனவரி 30-ம் திகதிவரையும் நாங்கள் அவகாசம் கொடுத்துள்ளோம். அதன் பின்னர் நாம் நிலைமையைப்பரிசிலனை செய்யலாம். அதுவரையும் நாம் கண்ணியத்துடனும் கட்டுக்கோப்புடனும நடந்துகொள்ளவேண்டும். தமிழ் மக்கள் ஒற்றுமையோடும் உறுதிப்பாட்டுடனும் இருந்தால் இழந்த உரிமைகளைப் பெறமுடியுமென்பதை மறந்துவிடலாகாது

## "சரஸ்வதிசிலை வைப்பதில் தவறில்லை'

உடுப்பிட்டி, ஞாயிறு

"இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு மேலாக அதிகப் பழமைவாய்ந்ததும், இலக்கியச் செழிப்பு மிக்கதும், விழாவெடுக்கும் அளவுக்குத் தமிழ்மக்கள் மத்தியில் வேரூன்றிவிட்டதுமான கலைத் தெய்வம் கலைமகளே. அறிவுக்கோயிலான நூல்நிலையங்களில், அதுவும் தமிழ்மரபு தழைத்த யாழ்ப்பாணத்து நூல் நிலையத்தில் கலைமகளைக் குடியிருத்தாமல் வேறு எங்கு வைப்பது?

வெள்ளைக்கலையும், வெள்ளைப்பணியும், வெண்தாமரைஆசனமும் எந்த மதத்துக்கும் விரோதமானவையல்ல. அறிவுத்தெய்வம் கரங்களிலே நூலேந்தியிருப்பதுஎவ்விதத்தும் மதவிரோதமாகாது. தமிழிசையின் சிறப்புக் கருவியான வீணையை இருகைகளாலும் ஏந்தியிருப்பதும்மதவிரோதமாகது. ஞானத்தின் எல்லையாகிய மோனத்தை நல்கும் தியாகத்தை உணர்த்தப் பிடித்திருக்கும் மாலையும் எந்தமதத்துக்கும் விரோதமானதல்ல. ஆதலின் யாழ். நூல்நிலையத்தில் சரஸ்வதி சிலை நிறுவுவதில் எவ்வித தவறுமில்லை.''

மேற்கண்டவாறு பருத்தித்துறை மக்கள் முன்னேற்ற இயக்கத்தின் ஆண்டு விழாவில் பேசுகையில் வித்துவான் க.ந.வேலன் கூறினுர். இக்கூட்டத்திற்கு திரு. செ.இராமச்சந்திரன் தலைமை வகித்தார்.

மற்றும் திருவாளர்கள் எம்சிவபாலன், பா.வைரவநாதன், இரகுபதிராசா, வே. சிவசுந்தரம், பி.பற்றிக், க.வேலாயுதம்பிள்ளை ஆகியோரும் பேசினர்.

யாழ்.நங்கையை அகற்றக்கோரும் தீர்மானமொன்றும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

## 'எந்தரோ மகானுபாவுலு!"

அதிகாலை துயில் விட்டெழுந்தவுடனே மனிதனுக்கு எத்தனை கவலைகள்! நோய் பிணிகள் ஒரு புறம், கடன் தொல்லைகள் ஒரு பக்கம், சத்துராதிகள் சதிகாரரா இன்னொரு பக்கம், வீட்டில் இருப்போரின் நச்சரிப்பு மற்ருேர் பக்கம்!

மனிதன் எங்கே தப்பலாம்? எங்கே ஆறுதல்?

இன்று என்னென்ன செய்யவேண்டும், என்னென்ன செய்யலாகாது. யார் யாரைப் பார்க்கவேண்டும், யார் யாரைப் பார்க்காமல் விலகி நிற்கவேண்டும்?

இப்படி அனந்த கோடி கிலேசங்களைப் படைத்துள்ளான் ஆண்டவன் இவற்றிலிருந்து தப்புவது எங்ஙனம்?

இம்மாநிலத்தில் பிறந்த மனிதனுக்கு இன்பம் அதிகமா, துன்பம் அதிகமா, இன்பமும் துன்பமும் சம அளவில் இருக்கிறதென்று ஞானிகள் தெரிவிக்கிருர்கள். உண்மை எது?

வாழ்க்கையில் நாம் அனுபவிக்கும் இன்ப நுகர்ச்சிகளை உடனுக்குடன் மறந்துவிடுகிருேம. துன்பகரமான நிகழ்ச்சிகள் தான் நம் உள்ளத்தில் என்றென்றும் பதிந்திருக்கும். இது ஏன் என்று நினைக்கிறீர்கள்?

எம்மைப் படைத்த இறைவன் இனிமேல் பூலோக இன்பங்களை விரும்பாதே, இறப்பு பிறப்பற்ற சாயுச்சிய பதவியைத் தேடு, உலக வாழ்க்கையில் துன்பம்தான் அதிகம், என்ற உண்மையை அடிக்கடி எமக்கு புலப்படுத்திக்கொண்டிருக்கிருன்! இதனுல்தான் இன்பகரமான நிகழ்ச்சிகளை விட துன்பகரமான நிகழ்ச்சிகளை எமது ஞாபகத்தில் பதிந்திருக்கின்றன.

ஃ ஃ ஃ

எங்கெங்கோ வேதாந்த தத்துவ சர்ச்சையில் இறங்கிவிட்டார் இவர். சொல்ல வந்த விஷயம் இது தான்.

நேற்றுக் காலையில், மேற்கூறிய சிந்தனைகள் தொடர்ச்சியாக மண்டையில் வந்து புக, இவர் பஸ் நிலையத்துக்கு வந்து ... கொண்டிருந்தபோது அருகிலுள்ள கடையொன்றில் 'எந்தரோ மகானுபாவுலு' அசரீரி மூலமாக ... வந்து பாய்ந்தது ... ஒலிலே' ... இயற்றிய அந்த ... ஞ்சரத்தின ... முதலில் இன்பம் பெய்தது. அடுத்தாற்போல அந்தக் கீர்த்தனம் கானுமிர்தபானமாகப் பொழிந்தது. கேட்டுக்கொண்டு அசைவுணர்வற்று நின்றுவிட்டார்இவர்.

இதற்கிடையில் இரண்டு பஸ் வந்து போய்விட்டது.

'எத்தனை கோடி இன்பம் தந்தனை இறைவா!' என்று அப்பெருமானை வாயார வாழ்த்தினேன்.

உலகில் இன்பமா, துன்பமா அதிகம் என்ற பிரச்னை இன்னும் என்னை வருத்துகிறது!

## நாட்டிலும் நகரிலும்

— 'வழிப்போக்கன்' —

போனுல் போகிறது பஸ் என்று இவர் மறுபடியும் அந்த நாகசுர இசையில் சொக்கிப்போய் நின்றுவிட்டார். அடுத்து இன்னும் இரண்டு மூன்று அற்புதமான தியாகராஜ கீர்த்தனங்கள் வந்தன.

இடையில், அகில இந்திய றேடியோ அறிவிப்பாளர் அந்த மதுரகானம் பொழிந்தது மன்னார்குடி பரமசிவனும், கே. நடராசனும் என்று தெரிவித்தார்.

எனக்கிருந்த கவலைகள், துன்பங்கள், நோய்கள், கிலேசங்கள், மிடிகள்யாவும் அந்த சொற்ப நேரத்தில் ஆதவனைக்கண்ட பனிபோல் மறைந்தன.

'எந்தரோமகானுபாவுலு' என்ற தியாகையா பஞ்சரத்தினம் என்னை நேற்று முழுவதும் ஆட்கொண்டுவிட்டது. இந்த கீர்த்தனையில் அடங்கியிருக்கும் தத்துவம் ஆழமானது. 'உலகில் எவனெவன் மகானுபாவனே அவனையெல்லாம் நான் வணங்குகிறேன்' என்று அவர் கூறுகிருர்.

சுந்தரமூர்த்தி நாயனுர் திருத்தொண்டத் தொகையில் உலகிலுள்ள அடியார்கள் எல்லார்க்கும் நாமும் அடியவன் என்று கூறிய கருத்தைக்கொண்டது மேற்படி கீர்த்தனை.

## "பொலிஸ்-மக்கள் உறவுக்கு தொண்டர்படை'

உடுப்பிட்டி, ஞாயிறு

"இலங்கையிலுள்ள சகல தொண்டர் படைகளிலும் வடமராட்சியே முன்னணியில் நிற்கின்றது. வடமராட்சியில் திருடர் தொல்லைகளும் அதிகம். இதனுல் தொண்டர் படையினரின் கடமைகளும் அதிகரிக்கின்றன. இலங்கையிலே அனைவரும் பாராட்டக்கூடிய ஒரு பெரிய தொண்டைத் தொண்டமனுறு என்னுமிடத்தைச் சேர்ந்த இளைஞரொருவர் செய்துள்ளார். கொலைவழக்கொன்றைத் துப்புத்துலக்குவதில் பொலிசாருக்கு உதவியாக அவர் பணிபுரிந்து வெற்றியும் பெற்றுள்ளார்.

தொண்டர்படை ... உணவு உற்பத்தியிலும் அதிக ... ... தொண்டர்களின் ... ... பயன்பெறும். தொண்டர்களுக்கு விரைவில் அடையாள அட்டைகளும் வழங்கப்படவிருக்கின்றன'' என யாழ். பிரதேச கிராம அபிவிருத்தி மேற்பார்வை அதிகாரி திரு. வே. பாலசிங்கம் புலோலி வேலாயுதம் ஆண்கள் ஆங்கில பாடசாலையில் நடைபெற்ற வடமராட்சி கிராமத் தொண்டர் படைக் கலந்துரையாடற் கூட்டத்தில் பேசுகையில் கூறினுர்.

வடமராட்சிக் காரியாதிகாரி திரு. எஸ். ஜெயகாந்தன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வடமராட்சியைச் சேர்ந்த சகல கிராம சேவையாளர்களும், கிராமத்தொண்டர் படையினரும் கலந்துகொண்டனர்.

பருத்தித்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு வீ. செல்லையா பேசுகையில் "பொலிசார் பொதுமக்களின் நலனைப் பாதுகாக்கவே நியமிக்கப்பட்டிருக்கிருர்கள். பொலிசாரை ... பொதுமக்கள் ... இல் எவ்வித ... மில்லை. ... பொலிசார்-பொது மக்கள் மத்தியில நல்லுறவு ஏற்பட தொண்டர்படை பெரிதும் உதவும்'' என்ருர்.

## 'உணவுற்பத்திக்கு உழையுங்கள்'

புலோலி, ஞாயிறு

புலோலிப்பகுதியில் உணவுற்பத்தியைப் பெருக்க வழிகாட்டுமாறும் இவ்வகையில் புலோலிப் பகுதிப் பாடசாலைகள் ஏனைய பகுதிகளிலுள்ள பாடசாலைகளுக்கு முன்மாதிரியாக விளங்கவேண்டுமென்றும் உணவுற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் தமது பள்ளிக்கூட ஆசிரியர்களை புலோலி மெதடிஸ்த பாடசாலை தலைமை ஆசிரியர் திரு. கந்தசாமி கேட்டுக்கொண்டார்.

உணவுற்பத்திக்காகதேசிய அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கைகளை ஆதரித்து அவற்றிற்கு உதவுவதே பாடசாலைகளின் இன்றைய மகத்தான பணியாகும் என அவர் சொன்னுர்.

மேற்படி பள்ளிக்கூட மாணவர்களும் ஆசிரியர்களும் ஓர் ஏக்கர் நிலத்தில் உப உணவுப் பொருட்கள் பயிரிடும் வேலையில் ஈடுபட்டுள்ளனர்.

...யருக்குக் கடிதங்கள்

## வானெலியிலும் ...வேஷப்பிரசாரமா?

...திரிகைகள் மூலம் ...துவேஷத்தைக் கக்க ... என்று எண்ணிவிடக் ...து. றேடியோவையும் ... விஷயத்துக்குப் ...கலாம் என்பதை ...பாது இலங்கையில் ... கண்டுபிடித்துவிட் ...ள் போலத் தோன்று...

...ங்கைக்குச் 'சிங்கள ... என்ற பெயர் எப்படி ...து என்பது பற்றிய ...தரங்கு [ஆங்கிலத்தில்] ...ற சனிக்கிழமை இரவு ...கை வானெலியில் ...பெற்றது. இந்த ...டல் வேறு இனங்களும் ...கின்றன என்பதைப் ... தெரியாமல் மறைக் ... அல்லது வேறு என்ன ...கத்துடனே இந்த ... அரங்கு ஏற்பாடு ...ப்பட்டு நடைபெற ... தெரியவில்லை.

...ிய ஐக்கியம்', 'இலங் ... நாம்' இப்படியெல் ... தேர்தல் காலங்களி... ... அரிசி-உப உணவுப் ...க்குறை ஏற்படும் ...ம் பேசப்படுகிறது. ... றேடியோ கருத் ...கள் மட்டும் ஓர் ...தவர் தான் இந்த ... இருக்கிருர்களென ...டடவர்கள் எண் ... அமைந்துவிடுகி...

...ளைக் கேட்க யாருமில் ... இலங்கை வானெலி ...ப்படிச் சில 'நல்ல' ...களும் நடைபெறு ... தேசிய ஐக்கியத்தை உண்மையாக விரும்புபவர்கள் கவனித்துக் கேட்பது நல்லதாக இருக்கும்.

இலங்கையன்

ஃ ஃ ஃ

## திருவாதிரை ஒரு விளக்கம்

யாழ்ப்பாணத்து மூன்று பஞ்சாங்கங்களிலும் மார்கழித்திருவாதிரை[ஆருத்திரா தரிசனம்] பிலவங்க வருஷம் மார்கழி மாதம் 3-ந் திகதி திங்கட்கிழமை [18-12-67] என்று பஞ்சாங்கத்தில் நிர்ணயித்திருக்கிறது. சிலர் இந்தியபஞ்சாங்கங்களில் மார்கழி 30-ந்திகதி ஞாயிற்றுக்கிழமையென்று நிர்ணயித்திருக்கிருர்கள். [14-1-68] மார்கழி 30-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை வாக்கிய பஞ்சாங்கப்படி சங்கிரம தோஷம் இருப்பதால் நாங்கள் முன்னுள்ள திருவாதிரையை ஆருத்திரா தரிசனமென்று நிர்ணயித்தோம். [18-12-67] இது சாஸ்திர சம்மதம். ஒரு மாதத்தில் இரு நக்ஷத்திரங்கள், இரு திதிகள் வந்தால்பிந்தியதைக் கொள்ளவேண்டுமென்று சாஸ்திரப் பிரமாணம், பிந்தியதில் சங்கிரம தோஷமேற்பட்டால் முந்தியதைக்கொள்ளவேண்டுமென்று சாஸ்திரசம்மதம்.

செ. இராசதுரை.

சுத்தவாக்கிய பஞ்சாங்க கணிதர்,
கொக்குவில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தில்

# 1 லட்சத்து 20 ஆயிரம் குடும்பங்களுக்கு 20 ஆயிரம் 'நெஸ்பிரே' மட்டும்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு லட்சத்து இருபதினாயிரம் குடும்பங்களுக்கு இருபதினாயிரம் 'நெஸ்பிறே' பால்டின்கள் மாத்திரம் அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ளது.

இத்தகவலை இங்கு நடைபெற்ற பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா தெரிவித்தார்.

ஆறுபேருக்கு ஒரு 'நெஸ்பிறே' வீதம் விநியோகிக்கப்பட்டால் அதை எவ்வாறு இந்தியாவுக்குக் கடத்தமுடியுமென்றும், கடத்த முயற்சித்தபோது கைப்பற்றப்பட்ட பொருட்களில் ஒரு 'நெஸ்பிறேயோ' அன்றி ஒரு 'ஹார்லிக்ஸோ' கூட அகப்படவில்லை யென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கள்ளக் கடத்தல்பற்றி திரு வேணன் அபயசேகரா தெரிவிக்கையில், வீடுகளிலோ. கடைகளிலோ கண்டு பிடிக்கப்படும் இந்தியப் பொருட்களை சுங்கப்பிரிவின் சட்டவிதிகளுக்கமைய கள்ளக்கடத்தல் பொருட்கள் எனக் குற்றமசாட்டமுடியாதென்றும், கடலிலும், கடற்கரைகளிலும் கைப்பற்றப்பட்ட பொருட்களையே கள்ளக்கடத்தல் பொருட்களௌன நிரூபிக்கமுடியுமென்றும் குறிப்பிட்டார். (ந.நி.)

## மந்திகை ஆஸ்பத்திரி

புலோலி, ஞாயிறு

வடமராட்சிப் பகுதிக்கு மிகப்பெரும் வைத்திய சாலையாக கருதப்படும் மந்திகை அரசினர் வைத்திய சாலை குறித்து இங்கு பெரும் அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது. இந்த ஆஸ்பத்திரி வாட்டுகளில் நோயாளர்கள் அனுபவிக்கும் இன்னல்கள் நாளுக்குநாள் அதிகரித்த வண்ணமாக இருக்கிறதாம், 'வைத்தியசாலை 'வாட்' கட்டிடங்களில் நிலவும் இட நெருக்கடியே இதற்கு மூல காரணமாகும் எனக் கூறப்படுகிறது. இரவில் திருடர்கள் இங்கு நடமாடுவதாகவும் நோயாளரின் வெந்நீர்ப் போத்தல்கள் போன்றவற்றை இவர்கள் களவாடி விடுவதாகவும் சொல்லப்படுகிறது.

## "கூட்டுறவுச் சங்க மூலம் வழங்குக"

சங்கானை, ஞாயிறு

யாழ்மாவட்டத்தில் சில இடங்களில் நாட்டரிசி கள்ளச் சந்தையில் கொத்து ஒன்று ரூ 1-70 சதமாக விற்பனையாகி வருகிறது. இதனைத்தொடர்ந்து இவ்வரிசியை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விற்பனை செய்வதற்கு உத்தரவு தரும்படி பிரதம மந்திரி டட்லி-சேனநாயக்கா, உணவு விவசாய மந்திரி எம். டி. பண்டா ஆகியோரைக் தந்தி மூலம் சங்கானை பட்டினசபைத் தலைவர் திரு. எஸ் கே. திருச்சிற்றம்பலம் கேட்டுள்ளார்.

அவர் மேலும் அத் தந்தியில் பிரத்தியேக வியாபாரிகள் தாங்களாகவே ஆக்கிக்கொள்ளும் விலையேற்றப் பிரச்சனைகளை குறைப்பதற்கு இத்திட்டம் ஏதுவாக அமைவதுடன் பொதுமக்கள் எதுவித கஷ்டமுமின்றி தங்களுக்கு தேவையான அரிசியை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளவும் முடியும் என்று குறிப்பிட்டுள்ளார்.

## அமைச்சர் விஜயம் பயனளித்தது

ஊர்காவற்றுறை ஞாயிறு

புங்குடுதீவு கிராமசபையினரால் நிர்வகிக்கப்பட்ட வல்லன் வீதியைத் திருத்தம் செய்து பஸ் போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் செப்பனிட்டுத் தர வேண்டுமென அப்பகுதி மக்களும் கி. ச. உறுப்பினரும் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள்காரணமாக இந்த வீதியின் அவல நிலையை அமைச்சர் திரு. திருச்செல்வம் புங்குடுதீவுக்கு விஜயம்செய்தபோது நேரில் பார்வையிட்டார்.

கடந்த வாரத்தில் இவ்வீதியை பகிரங்க வேலைப் பகுதியினர் பொறுப்பேற்றுள்ளனர்.

## நினைவு மண்டபம்

ஊர்காவற்றுறை, ஞாயிறு

புங்குடுதீவு 10-ம் வட்டார வாசியான காலஞ்சென்ற திரு. கதிர்காமர் நினைவுச்சின்னமாக புங்குடுதீவு கடற்கரையில் கண்ணகி அம்பாள் ஆலயத்திற்கு அண்மையில் மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அந்தியேட்டி முதலிய கிரியைகளுக்கு இந்த மண்டபம் உபயோகிக்கப் படுமெனத் தெரிகிறது.

## விருந்துபசாரம்

யாழ்ப்பாணம், திங்கள்

வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையின் ஆண்டு மகாநாட்டில் கலந்து கொள்ளும் பொருட்டு இங்குவரும் சர்வதேச கூட்டுறவு இணைப்பு ஸ்தாபனப் பிரதம அதிகாரியான டாக்டர். எஸ். கே. சக்சேனாவுக்கு மேற்படி சபையினர் இம்மாதம் 23ம் திகதி நண்பகல் போசனமும், யாழ்ப்பாணம் கூட்டுறவு வங்கி ஊழியர்கள் இராப் போசனமும அளிக்க விருக்கிறார்கள். [ந.நி]

## மறைந்த டாக்டருக்கு அனுதாபம்

உடுப்பிட்டி, ஞாயிறு

விபத்தில் மரணமான வடமராட்சி சுகாதார வைத்திய அதிகாரி திரு. ஜீவநாயகத்தின் மரணத்திற்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக கரவெட்டி வாணி கலைக் கழகத்தில் அனுதாபக்கூட்டமொன்று நடைபெற்ற. கழக இயக்குநர்பண்டிதர் க. வீரகத்தி கூட்டத்திற்குத் தலைமைவகித்தார்.

சைவப்புலவர்கள் திருவாளர்க்ள் செ. யோகராசா, ச. திரவியம் உட்பட வேறு பலரும் பேசினர். மறைந்த டாக்டரின் ஆத்ம சாந்திக்காக இருநிமிடம் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

## மத்திய மார்க்கட்

நுவரேலியா, ஞாயிறு

சுமார் நாலரை லட்சம் ரூபாவில் கட்டப்பட்டுவரும் நுவரேலியா மத்திய மார்க்கட் முடிவடையும் நிலையிலுள்ளது. அடுத்த வருடம் ஏப்ரல் மாதம திறப்புவிழா நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## ரப்பர் உற்பத்தி

கொழும்பு, ஞாயிறு

கடந்த வருடத்திலும் பார்க்க ரப்பர் உற்பத்தி இவ்வருடம் 15 சதவிகிதம் அதிகரித்துள்ளது. ரப்பர் செய்கை திட்டம் நல்ல பயனை அளித்துள்ளது.

## இணைப்புக்குழு கூட்ட தீர்மானம்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாண மாவட்டத்தைசேர்ந்த டீ பகுதிவீதிகள் மூன்றுவருட ஒப்பந்தத்தின் கீழ் பொதுவேலைப் பகுதியினரிடம் திருத்தவேலைகளுக்காக ஒப்படைக்கப் படும்.

இம்மாதம் 14-ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற விசேஷ மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது. அரசாங்கஅதிபர் திரு. வேணன் அபயசேகரா இக்கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

இப்பகுதியைச் சேர்ந்த பட்டினசபைகளுக்கும், நகரசபைகளுக்கும் கிராமசபைகளுக்கும் சொந்தமான திருத்தப்படாதிருக்கும் வீதிகள் பற்றிய விபரங்கள் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டன. இதுபற்றிய பூரண விபரங்கள் அடங்கிய அறிக்கையொன்று வேலைப் பகுதி அமைச்சின் அங்கீகாரத்துக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளது. இக்கூட்டத்துக்கு பொதுவேலைப்பகுதி எஞ்ஜினியர்கள், ஓவர்ஸியர்கள் சகலரும் அழைக்கப் பட்டிருந்தனர். (ந.நி.)

முள்ளியவளையில்

# பஸ் - மாட்டுவண்டி கோரவிபத்து

## வண்டிசாரதியும், மாடுகளும் ஸ்தலத்தில் மரணம்

முல்லைத்தீவு, ஞாயிறு

முள்ளியவளையில் நடைபெற்ற பஸ்-மாட்டுவண்டி விபத்தில் மாட்டுவண்டியை செலுத்திச்சென்ற முகம்மது அலி சாகுல் ஹமீத் என்பவர் ஸ்தலத்திலேயே மரணமானார்.

இரவு பத்துமணிக்கு நடைபெற்ற இவ்விபத்தில் இரண்டு மாடுகளும் அந்த இடத்திலேயே மாண்டன. இதுசம்பந்தமாக நடைபெற்ற மரணவிசாரணையின் பின்னர் சம்பந்தப்பட்ட இ. போ. ச. பஸ்வண்டியின் சாரதியான குலசேகரம் பிள்ளை என்பவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

## வங்கியிலிருந்து கடன் வசதி

கொழும்பு, ஞாயிறு

அபிவிருத்தித் திட்டங்களுக்கு இலங்கை வங்கியிலிருந்தும், மக்கள் வங்கியிலிருந்தும், உள்ளூராட்சி மன்றங்கள் கடனுதவி பெறுவது சம்பந்தமாக உள்ள வசதி பற்றி உள்ளூராட்சி மந்திரி திரு. எம். திருச்செல்வம் ஆராய்ந்து வருகிறார்.

## சமசமாஜ 23-வது ஆண்டுவிழா டிசம்பர் 31ல்

கொழும்பு, திங்கள்

லங்கா சமசமாஜக் கட்சியின் 23-வது ஆண்டுவிழா அடுத்தமாதம் 31ம் திகதி நடைபெற விருக்கின்றது.

கொழும்பு புதியநகரமண்டபத்தில நடைபெறவிருக்கும் இம் மகாநாட்டில், உள்நாட்டு உற்பத்திப் பொருட்களின் பொருட்காட்சியொன்றும் நடைபெறவிருக்கின்றது. இப் பொருட்காட்சியில் யாழ்ப்பாணத்து உற்பத்திப் பொருட்களுக்கான விசேஷ பிரிவொன்றுஅமைக்கப்படும்.

விசேஷ சொற்பொழிவுகளும், நான்கு மாபெரும் ஊர்வலங்களும், கலா நிகழ்ச்சிகளும் விழாவில் இடம் பெறவிருக்கின்றன.

(ந.நி)




லீட்டா பூரண ஆடைப் பால் பவுடர். மேற்கு ஐரோப்பாவின் மிகப்பெரிய அதி பிரசித்த பால் தயாரிப்புத் தொழிற்சாலையிலிருந்து வருகிறது. ஹாலந்தின் அதிகபட்ச அபிமானம் மிகுந்த இதில் 28 சத விகிதம் பாற் கொழுப்பும் 26.7 சத விகிதம் புரதச் சத்தும் உண்டு.

லீட்டா பூரண ஆடைப் பால் பவுடர், உண்மையான முதற்றர பூரண ஆடைப்பால் தர வேண்டிய அனைத்தையும் தருகிறது: இருந்தும், வேறெந்த ரகப் பவுடரையும் விடக் குறைவான நியாய விலையில் உங்களுக்குக் கிடைக்கிறது.

ஏக விநியோகஸ்தர்கள்

மில்லர்ஸ்

லிமிட்டெட்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கோலால் கொக்குவில் இந்து வெற்றி

## ஆனாலும் அருணோதயாவிட்டுக் கொடுக்காமல் விளையாடியது

யாழ்ப்பாணம், ஞாயிறு யாழ்ப்பாணம் பாடசாலை விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கல்லூரிகளுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் அளவெட்டி அருணோதயாக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற 2-ம் பிரிவு உதைபந்தாட்டமோதலில் கொக்குவில் கடுமையான போட்டியின் பின் அளவெட்டி அருணோதயாவை வென்றது.

இப்போட்டி ஆரம்பத்திலிருந்து இடைவேளைவரைக்கும் ஒருவருமே கோல்கள் போடவில்லை. இருசாராரும் விட்டுக்கொடுக்காமல் அருமையாக ஆடினர். எனினும் கொக்குவில் அதிக கோலடிக்கும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக்கொண்டிருந்த போதும் அவற்றை மயிரளவில் தவறவிட்டுக் கொண்டிருந்தது. இக்கட்டங்களில் கொக்குவில் கோஷ்டியைச் சேர்ந்த பவசிங்கம் காப்டன் இராசகுலசிங்கம், பவானந்தன் ஆகியோரின் அருமையான 'பாசிங்' ஆட்டம் சுறுசுறுப்பாகவும் அதனால் போட்டியில் ஒரு பரபரப்பையும் ஏற்படுத்தியது.

எனினும் அருணோதயா விட்டுக் கொடுக்கவில்லை. எதிர் கோஷ்டி கோலடித்துக்கொண்டு வரும் பந்துகளை அதிர் அடிபோங்டு அருமையாகத் திருப்பிக் கொண்டிருந்தனர். இச்சந்தப்பங்களில் இவர்களுக்கு ரஸிகர்களின் பலத்த 'அப்பிளாஸ்' கிடைத்துக்கொண்டிருந்தது. இடைவேளையின் போது ஒருவருமே கோல்கள் போடமுடியவில்லை.

இடைவேளையின்பின் ஆட்டத்தில் ஒரு புதுத்திருப்பம் காணப்பட்டது. எதிர்பாராத விதமாக கொக்குவில் தமது முழுப்பலத்தையும் கொண்டு எதிர்க்கோஷ்டியுடன் மோதினர். இதன் பயனாக சச்சிதானந்தன் என்னும் வீரருக்கு பல பந்துகள் பின்னணிவீரர்களால் அழகாகப் பாஸ்பண்ணப்பட்டது. இவற்றில் ஒன்றைப்பயன்படுத்திய அவ்வீரர் அதை அதிர் அடிபோட்டு ஒரு கோலாக்கினார். இப்போட்டி முடிவில் கொக்குவில் இந்து 1—0 கோலால் அளவெட்டி அருணோதயாவை வென்றது. இப்போட்டிக்கு திரு. வி.ரி. கணேசலிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். [வி நி.]

## யூனியன் வெற்றி

யாழ்ப்பாணம், திங்கள் யாழ்ப்பாணம் பாடசாலை விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் நேற்றுமுன்தினம் தெல்லிப்பளை யூனியன் கல்லூரிக்கும் அளவெட்டி அருணோதயா கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற 3-ம் பிரிவு உதைபந்தாட்டப் போட்டியில் யூனியன் கோஷ்டி கடுமையான மோதலின்பின் அருணோதயா கோஷ்டியைவென்றது.

இப்போட்டி ஆரம்பத்தில் 'போர்' அடித்தபோதும் கடைசி நேரத்தில் விறுவிறுப்பாகக் காணப்பட்டது. இப்போட்டியில் இரு கோஷ்டியினரின் விளையாட்டுத்தரமும் ஒரே மாதிரியேகாணப்பட்டது. இடைவேளைக்குப் பின்னர் ஆட்டம் அருமையாகவிருந்தது.

இப்போட்டி முடிவில் அளவெட்டி அருணோதயா ஒரு கோலும் போடாதவகையில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி ஒரு கோலால் வெற்றியீட்டியது. இப்போட்டிக்கு திரு. எஸ். ஸ்ரீனிவாசன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். [வி. நி.]

## வெற்றி தோல்வி இல்லை

சுழிபுரம், ஞாயிறு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மூன்றும் பிரிவு விளையாட்டுக் கோஷ்டிக்கும பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி மூன்றும் பிரிவு விளையாட்டுக் கோஷ்டிக்குமிடையே சிநேகிதபூர்வமாக நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது. போட்டி சுழிபுரம விக்ரோறியாக கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது திரு. வி. நாகராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

**2-ம் பிரிவில்**

மேற்படி கல்லூரிகளின் இரண்டாம் பிரிவு கோஷ்டியினருக்கிடையே நடை

8-ம் பக்கம் பார்க்க]

## வானொலி நிகழ்ச்சிகள்

### சென்னை - 1

திங்கள் 20 - 11 - 67

காலை 6-00 - வந்தேமாதரம், 6-05- துதிப்பாடல்கள் 6-35 அருள்வாக்கு, 6-45 மறைவழி, 6-55 நாதஸ்வரம் 7-15 செய்தி, 7-30 பாட்டு, 8-45 திரைகானம், 9-15 நாடகம், 9-45 இசைமலர், 01-00 நாதஸ்வரம், 10-55 ஆங்கிலத்தில்செய்தி, 11-55 பிராந்தியச்செய்திகள்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 கல்வி ஒலிபரப்பு, 1-00 மாதர் நிகழ்ச்சி 1-30 வாத்திய கோஷ்டி, 1-45 திரைகானம் 2-00 தமிழில் செய்தி.

மாலை 5-30 பாடற்பயிற்சி 5-15 மெல்லிசை.

இரவு 6 05 பிராந்தியச் செய்திகள், 6-15 அறிவிப்புகள், 6-30 வாத்திய இசை, 6-45 திரைகானம், 7-15 தமிழில் செய்திகள், 7-30 நம் விவசாயிகளுக்கு, 8-00 இளைஞருக்கு வழிகாட்ட பேச்சு, 8-15 நேயர் விருப்பம், 9-00 ஆங்கிலத்தில் செய்தி, 9-30 சத்திய சோதனை. 9-45 பாட்டு, 10-30 திரைகானம், 11-15 பாட்டு.

### திருச்சி - 1

காலை 6-30 வந்தேமாதரம், 6-40 ஆங்கிலத்தில் செய்தி, 6-45 நிகழ்ச்சிக் குறிப்பு, 6-50 பக்திப்பாடல், 6-55 அறஉரை, 7-00 துதிப்பாடல்கள், 7-15 தமிழில் செய்தி, 7-30 பாட்டு, 8-00 ஆங்கிலத்தில்செய்தி, 8-15 திரைப்படபாட்டுகள், 11-55 பிராந்தியச் செய்திகள்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12 30 கல்வி ஒலிபரப்பு, 1-00 பாட்டு, 1-30 ஆங்கிலத்தில் செய்தி, 1-50 இசைமஞ்சரி, 2-00 தமிழில் செய்தி.

மாலை 5-00 தியாகராஜ கீர்த்தனைகள், 5-30 திரைப்பட இசை.

இரவு பிராந்தியச்செய்திகள், 6-15 திரைப்படஇசை, 6-45 இசைப் பயிற்சி 7-00 சத்தியசோதனை, 7-10 மெல்லிசை, 7-15 தமிழில்செய்தி, 7-30 விவசாயிகளுக்கான நிகழ்ச்சி 9-00 ஆங்கிலத் [illegible] யும் 9-40 பாட்டு. 10-30 ஆங்கிலத்தில் செய்தி.

## யாழ். பாடசாலை உதைபந்தாட்டப் போட்டி

### மத்தியஸ்தர் பிரச்னை

யாழ்ப்பாணம். ஞாயிறு யாழ்ப்பாணம் பாடசாலை உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதாரவில் யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் கல்லூரிகளுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் பங்குபற்றியுள்ள சில கல்லூரிகள் அங்கு கடமையாற்றவரும் மத்தியஸ்தர்மீது பூரண நம்பிக்கையில்லையெனக் கூறி பகிஸ்கரித்த காரணத்தினால் சில போட்டிகள் பாதியில் நிறுத்தப்பட்டும் சில போட்டிகள் மத்தியஸ்தர்கள் வந்தும் நடைபெறுமலும், சில போட்டிகள் மத்தியஸ்தர்கள் வராமல் நடைபெறுமலும் இருக்கின்றன.

மத்தியஸ்தர் விஷயமாக அனேக போட்டிகள் சரியான முடிவு இல்லாமல் திரும்பத் திரும்ப நடைபெறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் பாடசாலை உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிக்கு இதுவரை மத்தியஸ்தர்களை வழங்கிவந்த யாழ்ப்பாணம் மத்தியஸ்தர் சங்கம் தற்பொழுது இச்சுற்றுப்போட்டிகளுக்கு மத்தியஸ்தர்களை அனுப்பாமல் நிறுத்தியது மேலும் பல பிரசனைகளைக் கிழப்புவதாக அமைந்துள்ளது.

மத்தியஸ்தர் சங்கத்தின் இத்திடீர் முடிவுக்குப்பின்னர் நடைபெற்ற போட்டிகளுக்கு தனிப்பட்ட மத்தியஸ்தர்களே மத்தியஸ்தம் வகித்துவருகிறார்கள்.

இதுவிஷயத்தில் கூடிய கவனமெடுத்து ஒரு நல்ல முடிவை விரைவில் ஏற்படுத்துவது யாழ்ப்பாண மத்தியஸ்தர் சங்கத்தினதும் யாழ் பாடசாலை விளையாட்டுச் சங்கத்தினதும் முக்கிய கடமை என்று கூறுகிறார் உதைபந்தாட்ட துறையில் அனுபசாலியான ஆசிரியர் ஒருவர். [வி. நி.]

## சிரமதான மூலம் புதியபாதை

புலோலி, ஞாயிறு துன்னாலை வடக்கில் உள்ள கியான் சுடலைக்கான ஒரு புதுப் பாதையை அப்பகுதி மக்கள் சிரமதானம் மூலம் அமைத்துள்ளனர். கிராம முன்னேற்றச்சங்கக் காரியதரிசி திரு. வே. க. வல்லிபுரம், பகுதிக் காரியாதகாரி, கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் இச்சிரமதானப் பணிக்குத் தலைமை தாங்கினர்.

**அம்பாறையில்**

## டிராக்டர் பயிற்சி நிலையம்

புலோலி. ஞாயிறு உணவு விவசாய அமைச்சு எடுத்த நடவடிக்கை காரணமாக அடுத்த ஜனவரியில் டிராக்டர் பயிற்சி நிலையமொன்று ஆரம்பிக்கப்படுமெனவும், இந்நிலையம் அம்பாறையில் நிறுவப்படுமெனவும் அறியப்படுகிறது.

இந்தப்பயிற்சி நிலையத்தில் 150 க்கு மேற்பட்ட வாலிபர்கள் பயிற்சி பெறுவர்கள் எனவும் இவர்கள் பயிற்சி முடிந்ததும் அரசாங்க டிராக்டர் நிலையங்களிலும் கூட்டுறவு விவசாய நிலையங்களிலும் வேலைக்கு அமர்த்தப்படுவார்களெனவும் மேலும் அறியப்படுகிறது.

## தாயும் மகளும்

வேருவலை, ஞாயிறு பலநாட்களாக இங்கு பூட்டப்பட்டிருந்த ஒரு வீட்டினுள் அழுகிய நிலையிலிருந்த தாயாரின் சடலத்துக்கருகே மயக்கமடைந்த நிலையில் மகள் கிடந்த காட்சியை அவ்வீட்டின் கதவைப் பலவந்தமாக உடைத்து உள் சென்ற பொலிசார் கண்டனர். (97 வயது) அன்சிநோனாவின் மாணவிசாரணையில் மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

## கூட்டுறவு சமாசக் கிளை

காங்கேசன்துறை, ஞாயிறு வலிகாமம் வடக்கு பலநோக்கு கூட்டுறவுச் சமாசகிளை ஒன்று மயிலிட்டியில் புதிதாக நிறுவப்பட்டுள்ளது, இக்கிளைக்கு மயிலிட்டிப் பகுதியிலுள்ள அறுநூற்றுக்கு மேற்பட்ட கூப்பன்களைப் பொதுமக்கள் கையளித்துள்ளனர்.

மக்களின் தோழன்!

சிங்கம் மார்க்




சந்தனாதித் தைலம்

வாங்கி உபயோகியுங்கள், எங்கும் கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:- போன்

ப.மு. & சன்ஸ்

88, செட்டியார்தெரு. கொழும்பு 11

ஈழவள நாட்டின்

வியாபாரிகள் எல்லோருமே

வாங்கி விற்பது

இது ஒன்றேதான்

மட்டக்களப்பு ஆனைப்பந்தி

பிள்ளையார் கோவில்

பிரம்ம ஸ்ரீ வி. வரதராசக் குருக்கள்

எழுதுவது:

அன்புடையீர்,

நீங்கள் அனுப்பி வைக்கும் பச்சைச் சந்தனம் சுத்தமானதாகவும் நறுமணமுள்ளதாகவும், தூய்மையாகவும் இருக்கிறது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ஆனைப்பந்தி பிள்ளையாருக்குச் சந்தனக்காப்புச் சாத்தி பணிந்து அருள் பெறுகிறீர்கள் அடியார்கள். உங்கள் சேவை தொடர்ந்து நடந்துவர வேண்டுமென்று எல்லாம் வல்ல சித்தி விக்னேஸ்வரனை வேண்டுகிறேன்.

இப்படிக்கு

வி. வரதராசக் குருக்கள்

இறைவன் திருமேனியில்

சந்தனக் காப்பிட்டு

அலங்கரிக்க மிகவும் உகந்த

பச்சை சந்தனம்

உடனுக்குடன் அரைத்துக் கொடுக்கிறோம்.

என்றும் எங்களிடம் கிடைக்கும்

சுந்தரம் பிரதர்ஸ்

கோவில் அபிஷேகப் பொருட்கள்

மருந்துச்சரக்கு விற்பனையாளர்

73, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கள்ளக் கடத்தல்

# வடபகுதி மீது மட்டுமே குற்றம் சுமத்த முடியாது

## அரிசியும் பால் உணவும் இங்கிருந்து கடத்தப்படுவதில்லை

### அரசாங்க அதிபர் விளக்கம்

— நமது நிருபர் —

யாழ்ப்பாணம், ஞாயிறு

**வடபகுதியில் நடைபெறும் கள்ளக்கடத்தல் சம்பவங்களில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே ஈடுபட்டுள்ளார்கள் என்று கூற முடியாது. தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களும் ஈடுபட்டுள்ளார்கள்.**

**இந்தக் கருத்தை நேற்று யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகர வெளியிட்டார்**

**தென்னிலங்கையைச் சேர்ந்த பலர் இங்கு கள்ளக்கடத்தலில் ஈடுபட்டதாகக் கைது செய்யப்பட்டார்கள் என்பதை அரசாங்க அதிபர் சுட்டிக் காட்டினர்.**

வடபகுதியில் கள்ளக் கடத்தலால் கடந்த 9 மாதத்தில் கைப்பற்றப்பட்ட பொருள்கள் 1 லட்சத்து 96 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் மாத்திரம் தான். இதில் 1 லட்சத்து 24 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை சுங்க இலாகாவினரும், 70 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை பொலிஸ், இராணுவ, கடற்படை உத்தியோகஸ்தர்களும் கைப்பற்றியுள்ளனர்.

இவ்வாறு நேற்று இங்கு நடைபெற்ற பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா தெரிவித்தார். அரசாங்க அதிபரின் அலுவலகத்தில் இம்மகாநாடு நடைபெற்றது.

திரு. வேர்ணன் அபயசேகரா மேலும் இங்குதெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்தில் அண்மையில் மட்டும் 9 லட்சம் ரூபா பெறுமதியான சேலைகளைப் பொலிசார் கைப்பற்றியதாக வெளிவந்த செய்தி தவறானதாகும். 1,96,000 ரூபாயும் கள்ளக்கடத்தலில் கைப்பற்றப்பட்ட பொருட்களினதும், அவைகளுக்கு விதிக்கப்பட்ட குற்றப் பணத்தையும் சேர்த்ததாகும். இதில் 70,000 ரூபா பெறுமதியான பொருட்களையே இராணுவ, கடற்படை, பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட பொருட்களில் இங்கிருந்து இந்தியாவுக்கு ஒரு பால்டின்னோ, அரிசியோ கடத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பாக்கு, சாதிக்காய் மருந்துப் பொருட்கள் ஆகியனவே இங்கிருந்து கடத்தப்பட்டனவாகும். அதே போல பவுண்டன் பேனை, மணிக்கூடு, சில்வர் போன்றன இங்கிருந்து கடத்த முயற்சிக்கப்பட்டனவாகும்.

இதே போல பலாலி விமான நிலையத்திலும் சுமார் 23,000 ரூபா பெறுமதியான பொருட்கள் கடந்த 9 மாதத்திலும் கடத்த முயற்சிக்கப்பட்ட போது கைப்பற்றப் பட்டுள்ளன.

இது சம்பந்தமாக நிருபர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் திரு. வேர்ணன் அபயசேகரா தெரிவித்ததாவது:

வடபகுதியில் கள்ளக்கடத்தலில் பிடிபட்ட பொருட்கள் அனைத்தையும் யாழ்ப்பாண மக்களே கடத்த முயற்சித்தார்கள் எனக் கூறமுடியாது. ஏனென்றால் தென்னிலங்கையைச் சேர்ந்த பலரும் இங்கு கள்ளக் கடத்தலில் கைது செய்யப் பட்டுள்ளார்கள். [ந. நி]

## முல்லைத்தீவுச் செய்திகள்

முல்லைத்தீவு, ஞாயிறு

இதுவரை காலமும் மாலை 6மணியுடன் மூடப்பட்டு வந்த முல்லைத்தீவு தபால் நிலையம் வவனியா எம்.பி. திரு. தா. சிவசிதரம்பரம் பல தடவை மேலதிகாரிகளை வேண்டியதற்கிணங்க நேற்று முன்தினம் முதல் இரவு எட்டுமணிவரை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

### மூடுவிழா

முல்லைத்தீவு இயந்திரக் கலப்பை நிலையம் பிரயோசனமில்லாதிருப்பதால் ஜனவரி முதல்மூடிவிடவவனியா மாவட்ட அதிபர்தீர்மானித்துள்ளதாகவும் இந் நிலையம் இருக்கும் இடத்தில்முல்லைத்தீவுக்கான நவீனதபால் நிலையம் அமைக்கப்படும் எனவும் அறியப்படுகிறது.

## அபராதம் ரூ. 75

முல்லைத்தீவு, ஞாயிறு

உத்தரவின்றி சாராயம் விற்றதாக மூவர்மீது குற்றஞ்சாட்டித் முல்லைத்தீவுக் கலால் பரிசோதகர் திரு. எம். என். இஸ்மெயில் தொடர்ந்திருந்த வழக்கில் முல்லைத்தீவு மாஜிஸ்திரேட் மூவருக்கும் 75 ரூபாய் அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். மோசஸ் பெண் ஹார் தம்மா, வீரவாகு தம்பையா, மரக்காயர் ஆகியோரே அந்த மூவராவர்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

ஒவ்வொரு உள்ளூராட்சிப் பிரிவிலும்

# இரண்டு மாணவருக்கு பல்கலைக்கழக கல்வி

கொழும்பு, சனி

**ஒவ்வொரு உள்ளூராட்சிப் பிரிவுகளிலுமிருந்து தெரிவு செய்யப்படும் இரண்டு மாணவர்களுக்கு பல்கலைக்கழகக் கல்வி பெறுவதற்கு வசதி செய்துகொடுக்கப்படும்.**

உள்ளூராட்சி அமைச்சரும், தேசியக் கல்விச்சபையின் தலைவர் டாக்டர் ஜி. பி. மலலசேகராவும் இன்று நடத்திய ஆலோசனைகளின் பின் உள்ளூராட்சி அமைச்சு இந்த முடிவை செய்திருக்கின்றது. மேல் கல்வி பெற ஆசையும் ஆர்வமும் இருந்த போதிலும் கூட அக்கல்வியைப் பெறக்கூடிய பொருளாதார வசதி இல்லாத மாணவர்கள் இந்த வசதியைப் பெறுவார்கள்.

சுமார் 5000 மாணவர்கள் மேல் கல்வி பெற முடியாமல் கஷ்ட நிலையில் தவிக்கிறார்கள் என்று திரு. மலலசேகரா கல்வி மந்திரியிடம் தெரிவித்துள்ளார்.

இந்த புதிய திட்டத்தின் மூலம் ஏராளமான மாணவர்கள் பயன் பெறுவார்கள் என்று கருதப்படுகின்றது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதியில் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு நவம்பர் மாதம் 20-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது

## "29-வது ஷரத்து நீங்கினாலே பௌத்தத்துக்கு உரியஇடம்"

### ஆர். ஜி. சேனநாயக்கா கூறுகிறார்

— நமது நிருபர் எச். நாணயக்காரா —

காலி, ஞாயிறு

''அரசியலமைப்புச் சட்ட விதிகளிலிருந்து 29வது ஷரத்து அகற்றப்பட்டாலேயொழிய இந்த நாட்டில் பௌத்த மதத்துக்கு உரிய இடம் அளிக்கப்படமாட்டாது'' என்று தம்பதெனிய எம். பி. திரு. ஆர். ஜி. சேனநாயக்கா கூறினார்.

காலி டஜ்ஜேண்டா ஸ்ரீ புஸ்பராமா கோயிலில நடைபெற்ற பாடசாலைகள் பரிசளிப்பு விழாவொன்றில் அவர் பேசுகையிலேயே மேற்கண்டவாறு சொன்னார். வண. யுத்ரநாளந்த நாயக்கதேரோ தலைமை வகித்தார்.

திரு. ஆர். ஜி. சேனநாக்கா மேலும் பேசுகையில் கூறியதாவது: ''ஒவ்வொரு நாடும் எதிரிகளாலும் சூழப்பட்டிருக்கிறதென்பதைச் சரித்திரம் எமக்கு உணர்த்துகிறது. பௌத்த பிக்குகளின் தலைமையில் அவர்களின் ஆலோசனையைக் கேட்டு சிங்கள மக்கள் ஒழுகுவார்களேயானால் நிச்சயமாக அவர்களுக்கு எதிரிகளால் எக்காலத்திலும் பயமில்லை.

சூதாட்டம் பௌத்த மதத்திற்கு அப்பாற்பட்டது. சில பௌத்த பிக்குகள் இந்தச் சூதாட்டத்தை ஆதரிப்பதாகத் தெரிகின்றது. நாடு இப்போது மாறிவிட்டதென்பதை இது காட்டுகிறது. இப்பொழுது உள்ள அரசியலமைப்பு முறையில் 29வது ஷரத்தின்படி பௌத்த மதத்துக்கு உரிய இடம் கிடைக்கமாட்டாது. ஏனெனில் 29வது ஷரத்தின்படி எல்லா மதங்களுக்கும் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளதால் எங்கள் பௌத்த மதத்துக்குத் தனியிடம் அளிக்கப்படமாட்டாது.''

அகில இலங்கைப் பௌத்த காங்கிரஸின் தலைவர் திரு. ஏச். டபிள்யூ. சமரசூரியா பேசுகையில், புத்தகங்கள் தான் ஒருவனை முழு மனிதனாக்குகிறதென்றார்.

உள்நாட்டமைச்சர் டாக்டர் டபிள்யூ. தஹநாயக்கா உட்பட மற்றும் பலரும் பேசினர்.

## மூதூர்க் கடிதம்

— நமது நிருபர் —

மூதூர், ஞாயிறு

மூதூரின் தென்பால்அமைந்த பல கனிஷ்ட பாடசாலைகளுக்கும் மத்தியிலான கிளிவெட்டி அரசினர் பாடசாலையை மகாவித்தியாலய தரத்துக்கு உயர்த்தவேண்டும். இதற்கு அடிப்படையான காரணங்கள் உண்டு. இதை திருமலை கல்வி அதிகாரியும் எம். பி. க்களும் நன்குணர்ந்து ஆவன செய்தல்வேண்டும். இத்தகைய வேண்டுகோளை மூதூர்தென் பகுதியைச் சேர்ந்த பலகிராமத்துப் பெற்றோர்களும் விடுத்திருக்கிறார்கள், இப்பகுதியைச் சேர்ந்த சிரேஷ்ட வகுப்புப்பயிலும் மாணவர்கள் மூதூருக்கு வரவேண்டியிருப்பதாயும்,மூதூரிலிருந்து பத்து மைல்களுக்கு மேற்பட்ட இடங்களைச் சேர்ந்த பிள்ளைகள் இவ்விதம் பயணம் வந்துகொள்வது என்பது கஷ்டத்திலும் கஷ்டமென்றும், இப்பகுதியில் ஒழுங்கான பஸ் சேவையும்இல்லையென்றும், எனவே தென்பால் வதியும் பிள்ளைகளுக்கு அவர்களின் உயர் கல்வி வசதியையிட்டு மத்தியில்உள்ள கிளிவெட்டி பாடசாலையை சிரேஷ்ட பாடசாலையாக்குவதே முறையாகுமென்றும் பேசப்படுகிறது.

### ''விவசாய வங்கி வேண்டும்''

மூதூர்ப்பகுதிஒருவிவசாய அபிவிருத்திப் பகுதியாய் இருந்துவருவதாலும்ஏழைக் கமக்காரர்களுக்கு வேண்டிய உதவிகளை நல்கும் பொருட்டும் மூதூரில் ஒரு விவசாய வங்கியை நிறுவவேண்டுமென மூதூர்ப்பகுதி விவசாயக்குழுக்கள் மத்தியில் பேசப்படுகிறது. இது சம்பந்தமாக ஒரு விரிவான மகஜரை இவர்கள் தயாரித்து இரு எம். பி. க்கள் மூலம் இதனை வலுப்படுத்தப்போவதாயும் சம்பந்தப்பட்ட வட்டாரங்களிலிருந்து அறியவருகிறது. மூதூருக்கு ஒரு மக்கள் வங்கியை நிறுவிக் கொடுப்பதில் தாமதம்செய்யும், அரசினர் இந்த புதியவழியிலான விவசாய வங்கியையாவது உதவ வேண்டும் ஒன்பது பொது மக்களின் அவாவாகும்,

## மணியோடர் யாருடையது?

யாழ்ப்பாணம் பஸ்நிலையத்துக்கருகாமையில் தந்தி மணியோடர் ஒன்றை ரி. ராசேந்திரம் என்பவர் கண்டெடுத்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் பெற்றுக்கொள்ளலாம்.

## வெற்றி...

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

பெற்ற போட்டியில் பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியினர் மூன்று கோல்களைப் போட்டு வெற்றி பெற்றனர். சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி ஒரு கோல் போட்டது. திரு. வி. இராசசுந்தரம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org